Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928வருஷ ஜூலைமீ 12உ [No. 28.

20 NOV 1928

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 541 |
| 2. | சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 543 |
| 3. | தமிழ்ப் பாடம் | 546 |
| 4. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L. | 548 |
| 5. | காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L. | 551 |
| 6. | வானசாஸ்திரம் | 554 |
| 7. | அகத்திய முனிவர் R. முத்தையர் | 555 |
| 8. | மலர்வனம் "மதுகரம்" | 557 |
| 9. | வர்த்தமானம் | 559 |

## கலா நிலயம்.

### சொல்வோரிற் கேட்பவ ரருமை II.

பிரான்ஸ் இதாலியா முதலிய ஐரோப்பிய தேசங்களில் அரசியல் நியதியிலும் பொதுஜன வாழ்க்கையிலும் இந்த வொரு சொல் குறித்த பொருளின் விரிவு தோன்றலாயிற்று. ஜடசாஸ்திர வளர்ச்சி இச்சொல்காட்டும் முடிவிற்கு எட்டியதாயிற்று. இந்தியாவிலும் வெளி அநுஷ்டான ஆசாரங்களே வாழ்க்கையின் செயலும் நோக்கமும் என்ற நினைவு மாறி ஆன்மவாழ்க்கையே சாச்வத பரிபூரண வாழ்வென்ற அறிவு தோன்றியகாலத்தில் அந்தச் சொல் தனக்கேற்ற உரிமையையும் சக்தியையும் பெற்றதாயிற்று. இவ்வாறே, புத்தமதம் தழைத்தோங்கிய காலத்தில் ஐம்புலன்களின் உணர்விற்கு எட்டிய வாய்ச் சுற்றிநிற்கும் வஸ்துக்களே தமதுலகம் என்ற பான்மையைப்போக்கி மனிதர் அன்பால் கண்ட பிரபஞ்சமெவ்வளவு அவ்வளவு தத்தம் உலகமும் என்ற கொள்கை வாய்ந்தவராய் அப்பிரபஞ்சத்திற்குத் தம்மையே எஞ்சுதலின்றி அர்ப்பணம் செய்ததுவும் இந்தவொரு சொல்லால் விளங்கியதாயிற்று. கற்சுவரும் இருப்புத்தளையும் சிறையாகா. நினைத்ததைச் செய்ய இயலாக் காரியத் தடைகளும் அடிமையன்று. மனிதர் மனிதரால் சிறையும் அடிமையும் உண்ண இயலுமென்பது பேதைமை. காலமும் இடமும் மனிதனைக் கட்டிவைக்க இடங்கொடுத்தால் அதுவே அவனுற்ற அடிமையாம். ஊழியும் உலகும் கடந்து நாற்றிசையும் முக்காலமும் வேறுவேறு என்று நாடாமல் நித்தியத்தில் நினைவூன்றி நிற்பதே அடிமை நீங்கிய விடுதலை. இன்னவகை முன்னுரைத்தவாறு அரசியல், சாஸ்திரம், அறிவு, தியாகம் என்ற நான்கு துறைகளில் இந்த விடுதலை தோன்றிய வரலாற்றைக் கவி இரவீந்திரநாதர் தம் கட்டுரையின் முதலிற் சில சொற்களால் தெளியவைத்தார்.

மேற்சொன்ன சாதனங்களினாலேனும் மற்றெவ்வேறு வகையினாலேனும் மனிதன் தன் சரீர அளவிற்குள் குறுகாமல், தன்னைச்சுற்றித் தானே பின்னிக்கொள்கின்ற சிறு வலைக்குள் அடங்காமல், இறப்பதோடு தன்னிருப்பை முடிக்காமல், அகிலாண்ட கோடிகளினளவிற்கு அவனை அகற்றி வைப்பது இந்த ஓம் என்னும் ஒரு சொல் காட்டி வருகின்ற ஒற்றுமைத் தத்துவத்தின் உண்மை நெறியாம். இந்நெறி பற்றாது பிறவழிபற்றித் திரிபவர் அனைவரும் விலங்கிற்கு நேரென்பர் நம் கவி. விலங்குகள் தம் வயிற்றிற்கு அடிமையாயின. அவ்வயிறு தனக்கு வேண்டிய உணவைத் தேடித் தருமாறு கட்டளையிடுகின்ற வேலையைச் செய்து முடிந்ததும் விலங்குகள் அன்றன்று செய்யத்தக்க வேலைகள் யாவும் முடிந்துவிடுகின்றன. அதற்குமேற்பட்டவொருநிலையெய்தியவன் மனிதனாயின் அவன் ஆன்ம சுதந்தரத்தை நாடுபவனா யிருத்தல்வேண்டும். தன்னொடு நின்றுவிடுவது ஆன்ம வாழ்க்கையன்று. இருட்டறையில் இருப்பவனுக்குத் தன்னைத்தவிர வேறொன்றையும் உணர்தல்இயலாது. ஆதலால் அவ்வறை எத்தனைதான் பெரியதாயிருப்பினும் அதன்கண் எவ்வளவு அழகு வாய்ந்த பொருள்கள் இருப்பினும் அவன் தொடர்பற்றுத் தனியே நிற்கின்றான்.

தன்னுளே தானாழ்ந்து தன்னுளே தானொடுங்கி அகண்டத்திற்கு உரியவனாதல் போக ஓர் அற்ப உருவமே அவன் அவ்விருட் டறையில் ஆகிவிட நேர்கின்றது. ஸ்பரிசத்தால் ஒரு சிறிது அண்டை அயலில் யாவையோ உளவென நினைத்து அவனால் ஊகிக்க இயலுமெனினும் அவைகளின் உண்மைத் தன்மையும் அவைகளுக்கிடையே தன் நிலை எய்திய பெருமையும் ஓர்வதற்கு அவன் பாத்திரனல்லன். நீட்டிய கையில் இடறுபவைகளைத் தன்பால் சேர்த்துக்கொள்வது கூடுமேயன்றித் தன்னைப் பிரபஞ்சத்தோடு சேர்த்துக்கொள்ள முடியாது. ஆன்ம அறிவில் வாழ்வது வெளிச்சத்தில் வாழ்வதாகும். ஆதலால் கவி கூறுவார், "சரீரத்தின் சுய பாதுகாப்பிற்கியன்ற உலகத்திற்காணும் மங்கிய வெளிச்சம் இரவின் உலகத்திற்கே ஏற்றது; மனிதரோ இரவில் திரியும் சந்துக்களல்லர்." தான்தான் என்ற தனிவாழ்வு விலங்குகளைப்போல் இருட்டிலும் வாழ்ந்து விடலாம். ஆனால் தனிவாழ்விற்கு மேற்பட்டவோர் பிரபஞ்சவாழ்க்கை விலங்கின் பருவத்தைக் கடந்த மனிதராயிருப்பவர்க்கு உரிமையாயிருக்கின்றது. அவ்வாழ்க்கைக்கு ஒளி வேண்டும். இந்த வொளியைச் சூரியனிற்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். கதிரவன் இன்னவர்க்கு அன்னவர்க்கென்று தனித்தனியாய்ப் பிரித்துக் காயாமல் எவ்வாறு உலகடங்கலும் தன்னொளியில் குளிக்கக் கொள்கின்றதோ அவ்வாறே ஆன்ம ஜோதியும் பிரபஞ்ச மயமானது. அதுபற்றி நம் கவிஞர்பிரான், "இந்த வொளி அச்சொல்லின் உண்மையான அடையாளம்" என்று விளம்புகின்றார்.

இதன்மேல், இவ்வளவும் உணர்ந்தால் (515-வது பக்கம், தன் பெருமையைத் தானே நம்புவதற்கு ஆதாரமாய சாக்ஷிகளை............என்று தொடங்கும் வாக்கியத்திலிருந்து) இரவீந்திரநாதரின் கருத்தைத் தொடர்ந்துபடிப்பது கடினமாயிராது. மனிதன் தன் பெருமையை நினையாததே அவன் வாழ்க்கை பலவிதங்களில் அவலமாவதற்குக் காரணமாய் நிற்கின்றது. மனிதனின் பெருமையாவது, அவன்வயிற்றையும் வாயையுமே உடையவொருசிறு பூச்சி அல்லவென்பதும், அகிலங்கள் யாவையோ ஊழியொடு ஊழி தொடர்ந்து நடக்கும் காலம் எதுவோ, அவ்வகிலமும் அக்காலமும் தானே ஆவன் என்பது நிறைந்த தன்மை. யாக்கை யல்ல மனிதன். அவன் குடியிருக்கும் வீடல்லன். அவனுடைய பொருள்களு மல்லன். பிறப்பிறப் பென்னும் எல்லைகளுக்குட் பட்டவனுமல்லன். ஈதறிந்தால் 'இன்று இன்று எனக்கு இது இது வேண்டும் வேண்டும்' என்று அவா ஒரு புறமும், அவ்வவாவிற்கு இடையூறு விளைப்பார்மாட்டுப் பகை மறு புறமும், 'இது பெற்றால் யாவும் பெற்றேன்' என்ற மயக்கம் எப்புறமும் இழுத்தலைக்க உழல்வனோ ஒருவன்!

"ஆம். இது ஓதுவது எளிது. உலகெலாம் யானே என்று எண்ணுவது பெருமையே. காலங் கடந்த வாழ்க்கை எனதாயின் இனியதே. மற்று, எவ்வாறு இதனை நம்புவேன். வலித் தொருகால் இந்நினைவை வர அழைத்தாலும், நில்லாதுபோய் விடுகின்றதே. எனக்குளதென்றென் றுரைத்த பெருமையெல்லாம் பேசு முயற்கொம்பேயோ" என ஒருபால்படாத உள்ளத்தராகின்ற மாந்தருக்கு இப்பெருமையின் உண்மையை ரூபிக்கும் பொருட்டு இடைஇடையே சாக்ஷிகள் அவசியமாகின்றன. இச்சாக்ஷிகள் இவனிற்கு வெவ்வேறுகாலங்களில் வெவ்வேறு விதமாயமைவனவாகும். அவைகளிற் சிலவற்றைக் கவிமுன்னே கூறினார். அவைதாம், சரித்திரமும், சாஸ்திரமும், ஞானமும், மதமும். இதன்பிறகு பின்னுமோர் புதிய சாக்ஷியால் அவ்வரிய நிலை எய்துதற்கு மனிதனால் இயலும் என்று காட்ட வருகின்றார் நம் கவி. அச்சாக்ஷிதான் அரவிந்த கோஷரும் அப்பெரியவரனைய ஆன்மஜோதி அகநின்று திகழ்கின்ற உத்தமர்களும் ஆவர். அவரும் ஒரு மனிதர். குற்றங் குறைவற்று நிறைகின்ற பிரபஞ்ச வாழ்வு வாழ்கின்றவர். அவரைக் கண்ட மாத்திரத்திலேயே அவரது அரைகுறை வாழ்க்கையால் தடைபடாத ஆன்மஜோதி தென்படுகின்றது. தென்படவே, முன்சொன்ன பெருமையை மனிதன் எய்தமுடியும் என்னும் நம்பிக்கை பார்ப்பவர்க்கு உண்டாகின்றது. மனிதனால் எய்தக் கூடிய நிலை இது அல்லவென்று நம்பாது மறுப்பதற்குப் பின் நியாயமில்லை. "இவ்வரவிந்தகோஷரும் நம்போல் மனித இனத்தைச் சேர்ந்தவராயிருக்க அவ்வொருவர் இருப்பதுபோல் நாமும் மற்ற மாந்தர்தந் தொகுதியும் ஏனிருத்தல் கூடாது?" என்ற நம்பிக்கையால் பிறந்த உற்சாகம், கண்டவர் உள்ளத்தில் அவரைக் காணுந்தோறும், மிக எழுந்து மேன்மேலும் வளர்வது இயற்கையே. இக்கருத்தே கொண்டு ஆங்கிலக்கவி ஷெல்லி என்பவர் "What one is why may not mankind be" என்று வினவியது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இன்னவித மாநுடப் பெருமையை அவனுக்கு நினைப்பூட்டிச் சாக்ஷியாய் நின்று நம்பும்படி செய்கின்றவன் யாவனெனில், புத்திமானல்லன்—அவன் பிரபஞ்சத்தைப்பகுத்துத் தனக்கேற்றதைத் தேடிக்கொள்பவனேயன்றிப் பிரபஞ்சத்தை இரண்டெனப் பிரிக்காமல் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளவில்லை; செய்கருமஞ்சாதிக்கும் சாமர்த்திய சாலியுமல்லன்—இவன் இன்று நாளை, அங்கு இங்கு, எனது உனது, என வரைநிறுவி அந்தக் காலத்திற்கும் அந்தத் தேசத்திற்கும் அந்த வர்த்தமானத்திற்கும் தன்னை அடிமையாக்கிக் கொள்பவன். இவர் சொல்லரிய நெறியை உணர்த்துபவரல்லர். ஆதலால் மாநுடப் பெருமையின் நம்பிக்கையை நம்பால் ஊன்றச் செய்பவனது இலக்கணத்தை இரவீந்திரநாதர் பின்வரும் வாக்கியத்தால் விளக்குகின்றனர் :—

> "எவனது வாழ்நாள் அச்சொல்லினோடு ஒன்றாகிக் கலந்துவிட்டதோ, என்றுமுள உடன்பாட்டின் சம்மதமாய ஓம் என்பது எவனது உருவமே உயிர்க்கின்றதோ, அவனே அம்மனிதனாவான்."

இரவீந்திரநாதரின் கட்டுரைக்குப் பொருள் காட்டும் முயற்சியை மேற்கொண்டு இங்கிது எழுதுகின்றோமாதலால், கூறியது கூறப்படா தென்னும் நியதியைப் பாராட்டாமல் முன் உரைத்த வாய்மைகளிற் சில நாம் பின்னுமிங்கு எடுத்துரைப்பினும் குற்றமென மதியார். அச்சொல்லினொடு ஒன்றாகிக்



கலந்தவன் யாவன் என்பதை உணர அச்சொல் எல்லாம் ஒன்றே என்ற தத்துவத்தின் அறிகுறி என்று முன் சொன்னதை நினைத்துக் கொள்ளல் வேண்டும். ஆதலால், தான்வேறு பிரபஞ்சம்வேறு என்ற பிரிவின்றித் தானே அப்பிரபஞ்சமாய்க் கலந்து நிற்கும் நிலை 'ஓம் என்பது என்றுமுள உடன்பாட்டின் சம்மதம்' என்பர் இரவீந்தரநாதர். இன்று நேற்று நாளை என்ற எல்லைச் சொற்கள் காலமானது ஆதியந்த மற்றதென்பதை எதிரே மறுக்கும் இயல்புடையன. ஒருவன் இவ்வெல்லையைக் கருதி ஒரு கருமம் செய்வானானால் அவன் 'என்றென்றும் மனிதனுக்குளது' எனும் சாச்வத வாய்மையைக் காலத்திற்குக் கொடுக்க மறுக்கின்றவனாகின்றான். சென்றது கருதுவதும் நாளைச் சேர்வது நினைப்பதும், பிறப்பு முதல் இறத்தல் ஈறாக இவன் காலம் அடங்கிமுடிகின்றது என்னும் கொள்கையால் நேர்கின்ற செய்திகளல்லவோ. உண்மையைப் பார்க்கப்போனால் காலம் என்பது பிறப்பதுமில்லை, நடப்பதுமில்லை, கழிவதுமில்லை. காலம் கழிகின்றது போகின்றது பறக்கின்றது என்னும் இவ்வழக்குப் பொய் என்பது எளிதில் புலப்படும். சூரியன் போவதும் வருவதுமாயிருக்கின்றானல்லாது நேற்றுப்போய் இன்றுவந்ததென்றால் காலம்எங்கும் போகவுமில்லை வரவுமில்லை. அது ஓரே நிலையில் அநாதியாய் நிற்கின்றது. கதிரவன் கதியோடு மனிதர் பிறந்தும் இறந்தும் பெயர்வதை, நிற்கின்ற காலத்தின்பாற் படுத்தி அதுபோவது வருவதாக மயங்குகின்றனர் மாக்கள். இருப்புப் பாதைவண்டியில் விரைகின்றவர் தாம் அசையாது நிற்பதாகவும் மரமும் செடியும் ஓடுவதாகவும் நினைக்கின்ற மதிமயக்கம் இது. ஆதலால் இன்று நேற்று நாளை என்பன காலத்தின் எதிர்மறை. அந்தப் பிரிவுகளுக்கு ஏற்றவாறு வாழ்கின்றவன் காலத்தை மறுத்து வாழ்கின்றான். விஷயங்கள் எல்லாம் ஒன்றே என்பதை அச்சொல் வற்புறுத்துவதுபோல் காலமும் ஒன்றே என்னும் உடன்பாட்டையும் அச்சொல் நிலை நிறுத்துகின்றது. முன் சொன்ன ஒற்றுமையையும் பின் சொன்ன உடன்பாட்டையும் உருவத்தாலும் உயிராலும் உயிர்ப்பினாலும் தன்னைப் பார்ப்போர்க்கு நினைப்பூட்டி நம்பச்செய்கின்றவனே மனிதனில் அலகிலாப் பிரபஞ்சத்தளவு பெருமைக்கும் முடிவிலா காலத்தளவு வாழ்க்கைக்கும் ஒருதனிக் கரியாய் நின்று மக்கள் தொகுதியை உய்ய வைக்கின்றான் என்பது, தெளிந்த காட்சியராய கவிவர இரவீந்தரநாதரின் தள்ளரிய துணிவாகும்.

இக்கொள்கையைத் தொடர்ந்து அவர் செப்பியுள பிற அரிய விடயங்களை மறவா மாராய்வோம்.

(தொடரும்)

# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

[527-ம் பக்கத் தொடர்ச்சி]

### "கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை"

அன்பின் இயல்பினையும் அதன் உயர்வினையும் அறிந்தோம். இவ்வன்பினைத்தான் நமது சேக்கிழார் பெருமான் புனைந்துரைக்கின்றார். கண்ணப்பர் இவ்வன்புருவாகவே விளங்கினார். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இருவர் இயற்கையால் முன்னுக்கு இழுத்து வரப்பட்டுத் தம்முணர்வற்றுத் தன்னந்தனியே கூடி ஒன்று படுதலே அன்பின் கதை என முன்னர்க் கண்டோம்.

ஒப்பு :—காதலனும் காதலியும் ஒத்தபிறப்பும் ஒத்த குடிமையும், ஒத்த மேன்மையும், ஒத்த ஆண்டும், ஒத்த உருவும் ஒத்த காதலும், ஒத்த நிறையும், ஒத்த உணர்வும், ஒத்த அருளும் உடையராய் இருத்தல் வேண்டும் என்று அன்பாராய்ந்தார் முடிவுகட்டியதனை முன்னமே குறித்துவைத்தோம். கண்ணப்பர் கதையும் அன்பின் கதையாதலால் கண்ணப்பரிடத்தும் கடவுள் இடத்தும் இவ்வொப்புமையை நாம் காணல் வேண்டும் இவை எல்லாவற்றையும் அட்டவணைப்படுத்தி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு எனச் சேக்கிழார் விரித்துச் சொல்லிக்கொண்டே போகவில்லை. அவ்வாறு சொல்வதும் பாவலர்களுக்கு அழகல்ல. கொண்ட கருத்தினைக் குறிப்பால் உணர்த்திச் சுவை யூட்டுதலே பாட்டிற்குப் பெரியதோர் சிறப்பாம்.

இனி இவ்வொப்புமை கூறுவதெல்லாம் எதற்கு? இவர் அவரிடத்தினின்றும் ஏதொன்றையும் எதிர்பார்க்கவில்லை என்பதைச் சுட்டவேயல்லவா? கடவுளுக்கும் கண்ணப்பர்க்கும் அவ்வளவே ஒப்புமைகூற இயலும். அதற்கு மேலும் சென்று எல்லாப்படியாலும் இவர் அவருக்கு இணையானவர் என்று இயம்ப இயலாது. அல்லாக்கால் கடவுள் ஒருவர் என்பதுபோக இருவர் என்று கொள்ளுதல் வேண்டும்.

கண்ணப்பர் தமது கடவுளை எல்லாம்வல்ல கடவுளாகக் கருதினார் அல்லர். தன்னுதவியை நாடித் தன்னந்தனியே காட்டில் தத்தளிக்கும் தலைவன் எனத் தம்முள்ளத்தே கொண்டார். அதற்கு இணங்க அவ்வாண்டவனும் இவர் எண்ணிய நிலையில் இழிந்து இவரது அரும்பேர் உதவியை நாடி நின்றான். அந்நிலையில் எல்லாவகையாலும் இவ்விருவரும் இணையானவர்களாகத் தோன்றுகின்றனர். கண்ணைப் பிடுங்கவைத்தார் கடவுள். ஈதெல்லாம் ஒரு திருவிளையாட்டெனக் கொண்டார். ஆனால் கண்ணப்பரது செயலைக் கண்டபோது அக்கடவுளே உள்ளம் நடுங்கினார். "தரித்திலர் தேவதேவர்" என்கின்றார் சேக்கிழார். இந்நடுக்கம் இறைவனுக்கு எதனால் எழுந்தது. கண்ணப்பரோடு ஒத்தநிலையில் கடவுளும்வந்து அமர்ந்ததால் அல்லவா? ஆகவே சேக்கிழார் இவ்விருவரையும் ஒக்கவைத்தே நோக்குகின்றார். இமையவர்களது தலைவன் இறைவன், காட்டாள்களது தலைவன் கண்ணப்பன்.

வந்துதிருக் காளத்தி மலையேறி வனசரர்கள்
தந்தலைவ னார்இமையோர் தலைவனார் தமையெய்தி
அந்தணனார் பூசையினை முன்புபோல் அகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின்செயன்முடிப்பார்.

என்றுபாடிப்போகின்றார்சேக்கிழார்.பெருமான் என்றும் வானவர் நாயகர் என்றும் கடவுளைப் புகழ்வதுபோலக் கண்ணப்பரையும் 'வனவேடர் பெருமானார்' என்றும் "கானவர் பெருமானார்" என்றும் போற்றுகின்றார்.

புலால் உண்டுமகிழ்வதில் கடவுளும் கண்ணப்பரும் ஒருவர் ஆயினர். குழந்தைகளது மகிழ்வாக விளையாடுவதைக் கண்டு இன்பமடைவார் அந்நிலையில் தம்மையும் வைத்து நோக்கவல்ல பெற்றோரும் பெரியோருமே ஆவர். அவர்கள் குழந்தைகளோடு குழந்தைகளாகிக் கூத்தாடுகின்றனர்; கொஞ்சிக்குலாவிக் கூவியாடிக் குழறி வழிகின்றனர். குழந்தைகளும் அவரை யறிகின்றன; அவர்களும் குழந்தைகளை அறிகின்றனர். குழந்தை நிலையிலே உடனாக நின்று இன்பம் துய்க்காதவர்களுக்கு அந்தப் பேச்செல்லாம் வெறுங் கூச்சலாய் அவர்கள் உள்ளத்தினை உலைக்கடம்போல எரியப்பண்ணி "காதடைத்துப் போகிறதே" என்று கதறச் செய்யும். விளையாட்டும் மலையாட்டம் போலத் தலை இடிக்கச் செய்யும்.

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.
குழலினி யாழினி தென்பதம் மக்கள்
மதலைச் சொல்கேளா தவர்.

என்பன எல்லாம் குழவிகளோடு அன்பால் ஒன்றாகக் குழைந்து தாமும் குழந்தைகளாய் நின்றவர்களுக்குத் தான் தெரியும். அஃதேபோல இறைவனும் கண்ணப்பரோடு கலந்து கண்ணப்பராகவே நின்றார். கண்ணப்பர் கண்ணை அகழ்ந்து எடுப்பதற்கு முன்னர்க் கடவுள் தாமே தம் கண்ணை அகழ்க்துகொண்டு அவற்றினின்றும் குருதி வழிந்தோடுமாறு செய்தார். இத்தகைய ஒப்பும் அன்பு நெறியில் கொள்ளத்தக்கதே.

காதலர் வழிபாடு :—கடவுளானவர் கண்டு களிக்குமாறு கண்ணப்பர்செய்த வழிபாடுதான் என்ன? பன்றி இறைச்சியைப் படைத்தார். அதிலும் எச்சில் இறைச்சி. இதைத்தான் ஊட்டினார். எச்சில் நீரை உமிழ்ந்தார். சிக்குப்பிடித்த தம் சடைத் தலையில் செருகிய சில பூக்களை மேலே உதறித்தள்ளினார். அவ்வளவே அவர் வழிபாடு.

கண்ணப்பர் நிலையில் நின்று அவரொடு ஒன்று கலவாதவருக்கு இவை எல்லாம் பழியுடைய செய்கைகளாகின்றன. சிவகோசரியார் கண்ணப்பரது அன்பு நிலையை அறியாது இவற்றிற்கு மனங்கலங்கிக் கைமுறித்து வயிற்றிலடித்துக்கொண்டு அழுது புரண்டலறினார்.

ஆனால் கண்ணப்பர் செய்தவழிபாடு எத்தகையது? காதலி தனது காதலனுக்கு இயற்றும் வழிபாடுபோலல்லவா இருக்கின்றது? பழைய உரையாசிரியர்கள் மறவாமல் பொன்னேபோலப் போற்றி எடுத்துக்காட்டிய பழந்தமிழ்ப் பாட்டொன்று எமது நினைவிற்கு வருகின்றது,

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

காதலன் வெளியேபோய் இருக்கின்றான். வருகிறபொழுதாய்விடுகிறது. அவன் பசியொடு வருவானே என ஏங்கிச் சோறு விரைவில் சமைக்கின்றாள். தானே தன் கையால் சமைக்கின்றாள். வேலைசெய்யப் பிறந்தவளா? அல்ல அல்ல. காந்தள் மலரினும் மெல்லிய விரல்களை அவளுக்கு அருளிய இயற்கை அன்னை வேலை செய்து கல்லாக்கா அவற்றைக் கொடுத்தருளினான். குவளைபோன்ற அழகிய கண்கள், புகை கப்பிக் கொள்வதால் தீய்ந்து கண்ணீர் விடவா படைக்கப் பட்டன; ஓவென வாழ்ந்தகுடி இப்பொழுது கூழுக்குக் கூவுகின்றதா? இல்லை இல்லை. விலையுயர்ந்த கலிங்கப்புடவை உடுத்தி வாழ்கின்றவளா ஏழை. அங்ஙனம் இருந்தும் அவன்மேல் இருக்கும் அன்பினாலே அடுப்பூதுகின்றாள்; சட்டி சுரண்டுகின்றாள். கட்டித் தயிரைப் பிசைந்து கரைத்தாலும் நோகக்கூடிய அத்துணை மெல்லியவிரல்கள். அவ்விரல்களைக் கொண்டு அகமுடையானுக்காகக் குழம்பு கூட்டுகின்றாள். இடையிலே புடைநெகிழ்கின்றது. எடுத்து இடுப்பிற் செருகுவதென்றாலோ கையெல்லாம் தயிராகயிருக்கின்றது;இருந்தாலும்என்ன! இன்னுயிர்க்காதலன் இன்னுமா காத்திருப்பது? கை கழுவிச் செருகுவதென்றால் காலமாகிவிடும். அழுக்கானாலும் ஆகட்டும் என்று அந்தக் கையாலேயே புடைவையைத் தூக்கிச்செருகிக் கொள்கின்றாள். கண்ணிமையைப் புகை கப்பிக்கொள்கிறது. அதற்காக அஞ்சி, அப்புறம் இப்புறம் திரும்புவாளா? முகத்தையேனும் சுளிப்பாளா? ஒருக்காலும் இல்லை. குனிந்தது குனிந்தவண்ணமாகக்'குவளையுண்கண் குய்ப்புகை கமழ' அடுப்பிலேற்றிய சட்டியில் கண்ணும் கருத்துமாக இருகின்றாள். காயலும், அவியலும் வறுவலும் பொரியலும் மிகுதியாய்ப் போயினும் கெடுங் குறைந்து போயினும் கெடும். சிறிது குறையினும் செல்வக் கொழுநனுக்கு ஆகாதென்று அற்றம் பார்த்து இறக்குகின்றாள் பக்கத்திலே பணிப் பெண்கள் பலர் இருந்தும் தானே தன் கைப்பட ஆக்கி இறக்கி அன்பூட்டிக் குழைத்த ஆரா அமுதினை அகமுடையான் வயிறார உண்டு 'மிகான்றாய் இருக்கின்றது' என்று நாக்கைத் தட்டிச் சுவைபார்த்து இன்னும் இரண்டுகை இனிதாக உண்ணக்கண்டு மனமிக மகிழ்கின்றாள். தலைகீழாகக் குதிக்கின்றாளா? இல்லை. உள்ளுக்குள்ளேயே ஓர் ஒளி அவளது திருமுகத்தில் மின்னிப் பொலிகின்றது. இவ்வாறு அப்பெண்மணியினது அழகின் அருமையினையும் செல்வத்தின் சிறப்பினையும் பிறப்பின் பெருமையினையும் அன்பின் ஆழத்தினையும், ஒழுக்கத்தின் உயர்வினையும் எடுத்துரைத்துப் புகழ்கின்றார் கூடலூர்கிழார்.

அப்பெண்மணி அகமுடையானை அன்பொடு வழிபட்டதுபோலக் கண்ணப்பரும் கடவுளை அன்பொடு வழிபடுகின்றார். இறைவன் பசிப்பானே என்று வைகறையாமம் துயிலெழுந்து வேட்டைக்குப் போகின்றார். செல்வத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளை இரவெல்லாம் இமையோடு இமைகொட்டாது விழித்திருந்தும் வைகறையே வேட்டைக்குப் புறப்படுகின்றார்.

வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமம் சென்று
சுருங்கிட அறிந்த புள்ளின் சூழ்சிலம் போசைகேட்டுக்
கருங்கடல் என்ன நின்ற கண்டுயி லாத வீரர்
அரும்பெறற்றம்பிரானூர்க் கமுதுகொண்டணையவேண்டி
எறுசாற் பன்றியோடும் இருங்கலை புனமான் மற்றும்[லே
வேறுவே றினங்கள் வேட்டை வினைத்தொழில் விரகினாலேறுசெய் காலம்சிந்தித் தருமிகத் தெரியாப் போதில்
மாறடு சிலையும்கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார்.

கதிரவன் காகா என்று மேலுயர வெயில்முதிர்ந்துஉச்சிவரும் வரை இனிக்கும் சுவையுடைய தசையாற் கொழுத்துப் பெருத்த விலங்குகளைத் தேடித்தேடி வேட்டையாடுகின்றார். 'வெயில்படு வெங்கதிர் முதிரத் தனிவேட்டைவினைமுடித்தார்' தீக்கடைந்துநெருப்புமூட்டுகின்றார்.



தேக்கிலைகளைத் தேடிக்கொண்டுவந்து பெரிய தொன்னை தைத்து வைக்கின்றார். தேன் கூண்டை அழித்து அத் தொன்னை நிறைய தேன் வார்க்கின்றார். நெருப்புச் சிறுதீயாக இருந்தால் நன்றாகத் தசை வேகாது என்று நன்றாக ஊதிக்கொழுந்து விட்டெரியுமாறு செய்கின்றார். தசைகளைத் துண்டு துண்டாகக் கொந்திக் கொழுத்த பகுதிகளை நெருப்பில் நன்றாக வதக்குகின்றார். அத்தசைகளை எந்த எந்த அளவில் இருக்கவேண்டுமோ அந்த அந்தப்படி எல்லாம் அம்பால் கிழித்தும் அறுத்தும் கொந்தியும் துணித்தும் ஒருபுறம் வைக்கின்றார். அவற்றில் எவை எவை சிறந்தனவோ, சுவையுடையனவோ, கொழுமையானவையோ, அவ்வவற்றை வேறு பிரித்து எடுத்து, அம்பில் குத்திக் கோத்து தீயில் நன்றாகக் காய்ச்சுகின்றார். இத்துணையும் செய்தது போதாதென்று "இனியவை இவை" என்றறிய இந்தப் பெருமானாரே தமது நாக்கிலிட்டுக் குதட்டிப்பார்த்துச் சுவை மிகுந்தவற்றைத்தொன்னையில் வேறுதனியாக உமிழ்ந்து வைத்துக் கொள்கிறார். தேனைத் தெளிய வடிகட்டி அதில் வார்க்கின்றார். கண்ணெதிரில் காணநின்ற காடனையேனும் நாணனையேனும் இவ்வேலை எல்லாம் செய்யச் சொல்கின்றாரா? இல்லை. அவர்கள் இருப்பதையே மறந்து தம் வேலையில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். காதலி தனதாருயிர்க்காதலனுக்குச் சமைப்பதற்கும் கடவுளுக்குக் கண்ணப்பர் சமைப்பதற்கும் உள்ளதோர் வேற்றுமை ஒன்றுமே இல்லை யெனலாம்.

பட்டவன விலங்கெல்லாம்
படர்வனத்தில் ஒருசூழல்
இட்டருகு தீக்கடைகோல்
இருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோற்றேனும்
மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெறுங்கல்லை
மருங்குபுடை படவமைத்தார்.

இந்தனமும் முறித்தடுக்கி
எரிகடையும் அரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து
மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தியயில் அலகம்பால்
குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில்
வக்குவன வக்குவித்து.

வாயம்பால் அழிப்பதுவும்
வகுப்பதுவும் செய்தவற்றில்
ஆயவுறுப் பிறைச்சிஎலாம்
அரிந்தொரு கல்லையிலிட்டுக்
காயநெடுங் கோல்கோத்துக்
கனலின்க ணுறக்காய்ச்சித்
தூயதிரு வமுதமைக்கச்
சுவைகாண லுறுகின்றார்.

கோலினிற் கோத்துக் காய்ச்சிக்
கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமுன் காண்பான்
வாயினில் அதுக்கிப் பார்த்துச்
சாலவு மினிய எல்லாம்
சருகிலை இணைத்த கல்லை
ஏலவே கோலிக் கூட
அதன்மிசை இடுவார் ஆனார்.

நல்லபத முறவெந்து
நாவின்கண் இடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன்
பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித்
தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினில் முன்புபோலுடன்
கொண்டுவந் தணைந்தார்.

இறைவர் பசிப்பரோ என்று என்ன பரபரப்பு. என்ன ஏக்கம். உணவும் வில்லும் மலரும் நீரும் ஒவ்வொன்றாகக் கொணர்ந்து சேர்ப்பதென்றால் அத்துணைபோதும் பொறுத்திருப்பரோ அழிபசியுற்ற ஆண்டவர். ஒருகையில் இறைச்சியை ஏந்திக் கொள்கின்றார்; மற்றொரு கையில் வில்லையும் பிடித்துக் கொள்கின்றார். இரண்டு கைகளும் இப்படிப்போனால் பூவையும் நீரையும் எங்கே வைப்பார். ஆகவே நீரை வாயில் முகந்து கொள்கின்றார். மலரைத்தன் முடியிற்சூடிக் கொள்கின்றார், சூடிக்கொடுத்த நாச்சியார் போலச் சூடிக் கொடுத்த நாயனார் இவர் ஒருவர். அன்பினால் அன்றோ அத்துணையும் செய்கின்றார்.

கானவர் போனதோரார் கடிதினிற்கல்லை யின்கண்
ஊனமுத மைத்துக்கொண்டு மஞ்சனமா டவுன்னி
மாநதி நன்னீர்தூய வாயினிற் கொண்டுகொய்த
தூநறும்பள்ளித்தாமம் குஞ்சிமேல் துதையக்கொண்டார்.
தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் றுங்கிக்கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனகம் ஒருகை ஏந்தி
இனியஎம் பிரானார் சாலப் பசிப்பர்என் றிரங்கி ஏங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினார் திண்ணனார்தாம்.

எங்கே பசியால் வாடுகின்றாரோ என ஓடோடியும் போகின்றார். பழம்பூக் களைந்து புதுப்பூச் சூட்ட வேண்டும். கையிலோவில்லும் கல்லையும் இருக்கின்றன. என் செய்வார். தமது திருவடியாலே பழம்பூவை நீக்குகின்றார். திருவாய் நீரை யுமிழ்கின்றார். மலரை எடுத்துச் சூட்டக் கை மூன்று கண்ணப்பருக்கு? தலையைக் கடவுள் மீது சாய்த்துச் சூட்டுகின்றார்; தலைவன்மேல் பூக்கள் வீழ்ந்து பொலிகின்றன. இறைவன் எதிரே இறைச்சியை வைக்கின்றார்.

இளைத்தனர் நாயனார் என்றீண்டச்
சென்றெய்தி வெற்பின்
முளைத்தெழு முதலைக்கண்டு
முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபொற் செருப்பான் மாற்றி
வாயின் மஞ்சனநீர்தன்னை
விளைத்த அன்புமிழ்வார் போல
விமலனார் முடிமேல் விட்டார்.

தலைமிசைச் சுமந்த பள்ளித்
தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பிரானார்
முடிமிசை வணங்கிச் சாத்திச்
சிலைமிசைப் பொலிந்த செங்கைத்
திண்ணனார் சேர்த்த கல்லை
இலைமிசைப் படைத்த ஊனின்
திருவமுது எதிரே வைத்து.

கொண்டுவந்த உணவைக் குழந்தைக்கு ஊட்டுவது போலப் பரிவோடும் ஊட்டுகின்றார். எவ்வளவு வருத்தத்தோடும் கொண்டு வந்ததையா அது! இறைச்சி என்றிகழத்தகுமோ. அவரது அன்பைக் குழைத்து வைத்ததல்லவா அது. என்ன பரிவோடும் என்ன அன்போடும் உள்ளம் நெக்கு நெக்கு உருகி ஊட்டுகின்றார்.

கொழுவிய தசைகள் எல்லாம்
கோலினில் தெரிந்து கோத்தங்கு
அழலுறு பதத்தில் காய்ச்சிப்
பல்லினால் அதுக்கி நாவில்

பழகிய இனிமை பார்த்துப்
படைத்த இவ்விறைச்சி சால
அழகிது நாயனீரே
அமுதுசெய் தருளுமென்றார்.
ஊனமுது கல்லையுடன்
வைத்திது முன்னையினன்றால்
ஏனமொடு மான்கலைகண்மரை
கடமை இவையிற்றில்
ஆனஉறுப் பிறைச்சியமு
தடியேனும் சுவை கண்டேன்
தேனுமுடன் கலந்ததிது
தித்திக்கும் என மொழிந்தார்.

குழந்தை உண்ணும் சிற்றுண்டியில் பெரியோர்களுக்கு ஏது விருப்பு. ஆனால் குழந்தையோ அன்பின் மிகுதியாலே தள்ளாடித் தள்ளாடித் தளர் நடையிட்டுவந்து மழலை மொழிகளைப் பாட்டாகப் பாடிக்கொண்டு எக்கி எக்கி வாயை எட்டி அம்மை வாயிலும் அப்பன் வாயிலும் தான் உண்பதை வைத்து, முகத்தொடு முகம் வைத்து முத்தாடிக் கண்ணுக்குள்ளே ஊடுருவிப் பார்த்துக் கலகலஎன நகைத்துக் கண்டபடி கையை யாட்டிக் கூத்தாடுகின்றது. அதனை அருமருந்து என்று கொண்டு பெருவிருந்தாக அம்மையும் அப்பனும் அகமகிழ்ந்து உண்கின்றனர். அதுபோலவே கண்ணப்பர் தமக்கானது தம் காதற் தலைவனாகிய கடவுளுக்கும் ஆகவேண்டு மெனக் கருதுகின்றார். அந்தக் கடவுளும் அந்தக் கருத்துக் கிசைகின்றார். அவர் செய்த வழிபாடு சிறு பிள்ளை விளையாட்டாகத் தோன்றினாலும் பெற்றோர் அதனைப் பெரிதும் போற்றுவது போலப் பெருமானும் இவ்வழிபாட்டை அன்பு வழிபாடெனக் கொண்டு அவர் மனநிலையோடு ஒத்துநின்று அதன் அருமையைப் பாராட்டிப் புகழ்கின்றார். அதனைத் தானே சிவகோசரியாருக்குச் சிவபெருமான் எடுத்துக் கூறுவது.

பொருப்பினில் வந்தவன் செய்யும்
பூசனைக்கு முன்பெண்மேல்
அருப்புறு மென்மலர் முன்னை
யவைநீக்கும் ஆதரவால்
விருப்புறு மென்பெனும் வெள்ளக்கால்
பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படி அவ்விளம் பருவச்சேயடியிற்
சிறப்புடைத்தால்.

உருகிய அன்பொழிவின்றி நிறைந்த
அவன் உருவென்னும்
பெருகிய கொள்கல முகத்தில்
பிறங்கிஇனி தொழுகுதலால்
ஒருமுனிவன் செவியுமிழும்
உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கவன்றன்
வாயுமிழும் புனல்புனிதம்.
இம்மலை வந்தெனை யடைந்த
கானவன்றன் இயல்பாலே
மெய்ம்மலரும் அன்புமேல்
விரிந்தனபோல் விழுதலாற்
செம்மலர்மே லயனெடுமான்
முதற்றேவர் வந்துபுனை
எம்மலரும் அவன்தலையால்
இடுமலர்போல் எனக்கொவ்வா.
வெய்யகனற் பதங்கொள்ள
வெந்துளதோ எனுமன்பால்
நையுமனத் தினிமையினின்
நையமிகு மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர்
முன்புதரும் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்றான்
இட்டவூன் எனக்கினிய.
மண்பெருமா மறைமொழிகள்
மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள்
மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன்றன்
முகமலர அகமெகிழ்ந்த
அன்பினினைந் தெனையல்லாலறி
வுறுமொழி நல்ல.

"செருப்படி அவ்விளம் பருவச் சேயடியில் சிறைப்புடைத்தால்" என்று சேக்கிழார் சொல்லியது நக்கீரர் சொல்லிய தொன்றல்ல. அது நாம் மேற்கூறிவந்த குழந்தை ஒப்புமையை முடிந்தது முடித்தலாக வற்புறுத்திக் காட்டும் இவ்வளவும் கூறியதால் அன்பினைந்திணையில் ஒத்தகிழவனும் ஒத்தகிழத்தியும் என்று கூறுவது போல இங்கும் ஒத்த கண்ணப்பரும் ஒத்த கடவுளும் என்று கூறுவதற்கு இடமுண்டு என்பதாயிற்று.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

# தமிழ்ப் பாடம் 28.

## நள வெண்பா

(530-வது பக்கத் தொடர்ச்சி)

### கலிதொடர் காண்டம்.

பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காணெ
மின்னெடுவேற் கையான் விரைந்து. [ன்றான் 3.

பதப்பிரிவு :—பாவையர் கை தீண்ட பணியாதார் யாவரே புவையர் கை தீண்டலும் அ பூ கொம்பு மேவி அவர் பொன் அடியில் தாழ்ந்தனவே பூ குழலாய் காண் என்றான் மின் நெடு வேல் கையான் விரைந்து.

அன்வயம் :—மின் நெடு வேல் கையான் விரைந்து, "பூவையர் கைதீண்டலும் அப்பூகொம்பு மேவி அவர் பொன்னடியில் தாழ்ந்தனவே—பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே—பூங்குழலாய், காண்" என்றான்.

பதவுரை.

மின் - மின்னுகின்ற
நெடு - நீண்ட
வேல் - வேலாயுதத்தை ஏந்திய
கையான் - கையையுடைய நளன்
விரைந்து - விரைவாக,
"பூவையர் - மாதர்களது
கை - கைகள்
தீண்டலும் - பட்டதும்
அ - அந்த
பூ-மலர்கள் நிறைந்த
கொம்பு - கிளைகள்
மேவி - விரும்பி
அவர் - அம்மாதர்களின்



பொன் - அழகிய
அடியில் - பாதங்களில்
தாழ்ந்தனவே - வணங்கினவே, (எனினும், இதில்
ஒன்றும் வியப்புமில்லை, ஏனெனில்)
பாவையர் - மாதர்கள்
கை - கையால்
தீண்ட - தொட்டவுடன்
பணியாதார் - வணங்காதவர்
யாவரே - யாரிருக்கின்றனர் (ஒருவருமில்லை)
பூ - அழகிய
குழலாய் - கூந்தலையுடைய (தமயந்தியே)
காண் - பார்"
என்றான் - என்று காட்டிக் கூறினான்.

விரிவுரை :—நளனது தேர் சென்ற வழிக்கருகே நிகழ்ந்த நிகழ்ச்சிகளுள் இதுவொன்று. பூத்தலர்ந்த கொடிகளை மாதர் எட்டிப்பற்றினவுடன் அவை வளைந்து அவர்களின் காலிற் படும்படி சாய்ந்தன. உணர்ச்சியற்ற மரங்களே மாதர் கை பட்டதும் அவர்களுக்கு அடிமை ஆகின்றனவென்றால் புருடர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ என, அசதி ஆடுவானாய் நளன் தமயந்தியிடம், "பாவையர் கைதீண்டப் பணியாதார் யாவரே" எனக்கூறியபோது அவளுஞ் சிறிது புன்னகை எய்தியிருப்பாள். யாவரே என்பதிலுள்ள ஏகார இடைச்சொல், ஒரு வருமில்லை என்ற எதிர்மறைப் பொருளையும், "புருடரின் கதி பேதைமையால் இவ்வாறாயிற்றே" என்ற இரக்கப் பொருளையும் குறித்து வந்திருக்கின்றது.

[தைப்
மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச் — செங்
[கையாற்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து 4.

பதப்பிரிவு:—மங்கை ஒருத்தி மலர் கொய்வாள் வான் முகத்தை பங்கையம் என்று எண்ணி படி வண்டை செம் கையால் காத்தாள் அ கை மலரை காந்தள் என பாய்தலுமே வேர்த்தாளை காண்என்றான் வேந்து.

பதவுரை.

வேந்து- நளராஜன்,
"மலர் - மலர்களை
கொய்வாள் - பறிக்கின்றவளாகிய
மங்கை - பெண்
ஒருத்தி - ஒருத்தியின்
வாள் - ஒளிபொருந்திய
முகத்தை - முகத்தினை
பங்கயம் - தாமரை
என்று - என்று
எண்ணி - தப்பாக நினைத்து
படி - வந்து படிகின்ற
வண்டை - வண்டுகளை (அவள்தன்)
செம் - சிவந்த
கையால் - கைகளால்
காத்தாள் - தடுத்தாள். (ஆனால் அவ்வண்டுகளோ)
அ - அந்த
கை - கைகளாகிய
மலரை - மலர்களை
காந்தள் - காந்தள்மலர்
என - என்று நினைத்துப் (பின்னும்)
பாய்தலுமே - பாய்வதனால்
வியர்த்தாளை - வியர்க்கின்றவளை
காண் - பார்"
என்றான் - என்று சொன்னான்.

விரிவுரை :— பொழில் விளையாட்டைச் சேர்ந்த இன்னொரு நிகழ்ச்சியை நளன் தமயந்திக்குக் காட்டுகின்றான். மாதர்முகம் தாமரைமலரையும், அவர்கள் கை காந்தள்மலரையும் நிகர்க்கும் என்பது பிரசித்தம். மலர் கொய்கின்ற ஒருத்தியினுடைய முகத்தை வண்டுகள் தாமரைமலரென்று மயங்கி மொய்க்கவருகின்றன. இதற்கு அஞ்சிய அவள் தன் கரங்களை முகத்தருகே மறித்து அவ்வண்டுகளை விலக்கக் கருதினாள். அக்கைகளையோ வண்டுகள் காந்தள்மலரென நினைத்து அதை மொய்க்கப் பின்னும் பாய்ந்தன. என் செய்வாள்பாவம், நடுங்கிப் போய் வியர்க்காலாயினாள். அவளது நொய்மையையும் பேதைமையையும் வண்டின் அறியாமையையும் நளன் தமயந்திக்குக் காட்டுகின்றான்.

இந்தச் செய்யுளில் சிறியதும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடியதுமான வோர் அணி அமைந்திருக்கின்றது. அது மயக்கவணி. மயக்கவணி யென்பது ஒருவஸ்துவை அதற்கு உவமையான மற்றொன்றே என்று எண்ணி விவகரிப்பது. தாமரைபோன்ற முகத்தையும் காந்தள்மலர்போன்ற கைகளையும் உடையவள் அம்மலர்கொய்யும் பெண் என்று சொல்வதற்குப் பதிலாய், தாமரையென்றே அவள் முகத்திலும், காந்தள் என்றே அவள்கையிலும் வண்டுகள் படிய வந்தன, எனக் கூறியதில் வண்டுகள் முகத்தையும் கையையும் அவைகளுக்கு உவமைகளான பொருள்களென்று வேற்றுமை யறியாமல் மயங்கினபடியால் இங்கிது மயக்கவணி ஆயிற்று. மாதர்களுடைய கண்களைக்கண்டு வண்டுகள் அவை தமது பெண் வண்டு என்று எண்ணி அணுகும் என்றுகம்பர் ஓரிடத்தில் கூறுவதும் மயக்க அணியாம். சிவபிரானது சடையிற்சேர்ந்த பிறைச் சந்திரனைப் பிள்ளையார் தன் கொம்பினின்று உடைந்த துண்டென்று எண்ணி அதைச் சடையிலிருந்து பறித்துச் சேர்த்து வைத்துப்பார்த்தார், என்று அதிவீரராம பாண்டியன் விநாய வணக்கம்பாடிய செய்யுள் இம்மயக்க அணிக்கு அழகிய உதாரணம்.

குறிப்பு :—கொய்வான், வேர்த்தாளை, என்பன வினையாலணையும் பெயர்கள்.

புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போற்
செல்லு மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போ
யம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரிற் றேனை தெளி. 5.

பதப்பிரிவு :—புல்லும் வரி வண்டை கண்டு புனம் மயில்போல் செல்லும் மடந்தை சிலம்பு அவித்து மெல்ல போய் அ மலரை கொய்யாது அரும் தளிரை கொய் வாளை செம் மலரில் தேனே தெளி.

பதவுரை.

செம் - சிவந்த
மலரில் - தாமரைமலரில் இருக்கின்ற
தேனே - தேன்போன்ற தமயந்தியே,
புல்லும் - பெண்வண்டைத் தழுவியிருக்கும்
வரி - கோடுகளமைந்த
வண்டை - ஆண்வண்டை
கண்டு - (மலரொன்றில்) கண்டு (அவைகளுக்கு
அச்சமுண்டாக்கி இன்பத்தைக் கெடுக்கப்
படாதென்று)
புனம் - காட்டில் திரியும்
மயில்போல் - மயிலைப்போல்
செல்லும் - ஒதுங்கிப் போக்கும்

மடந்தை - இந்தப் பெண்
சிலம்பு - தன்கால் சிலம்பின் ஒலியை
அவித்து - அடக்கிக் கொண்டு
மெல்ல - மெல்ல
போய் - போய்
அ - (வண்டுதழுவிய) அந்த
மலரை - மலரை
கொய்யாது - பறிக்காது
அரும் - இளமையாகிய
தளிரை - தளிர்களையே
கொய்வாளை - பறிக்கின்றவளை,
தெளி - நன்றாகப்பார்.

விரிவுரை:—"மலரொன்றினில் வண்டிரண்டு இன்பமாய்த் தழுவி அணைத்துக் கொண்டிருக்கக் கண்டு அவைகளுக்கு எவ்வித இடையூறும் செய்ய மனங்கொள்ளாமல் ஒருத்தி தன்கால் சிலம்புகூட ஒலிக்காதபடி மெல்லச் சென்று அம்மலரைக் கொய்யாமல் இளந்தளிர் தனக்குப் போதுமென்று பறிப்பவளைத் தமயந்தியே நீபார்த்து அவள் எவ்வளவு மென்மையாய குணமுடையவள் என்பதைத் தெரிந்து கொள்" என்று நளன் தமயந்திக்குக் காட்டிச் சொல்வது.

கொய்த மலரைக் கொடுங்கையி னாலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினான் பாவையிடைக்
காதார மின்மை யறிந்து. 6

பதப்பிரிவு:—கொய்த மலரை கொடுங்கையினால் அணைத்து மொய் குழலில் சூட்டுவான் முன்வந்து தையலாள் பாதம்அரவிந்தத்தே சூட்டினான் பாவை இடைக்கு ஆதாரம் இன்மை அறிந்து.

அந்வயம்:—(ஒருநாயகன்) கொய்த மலரைக் கொடுங்கையினால் அணைத்து (தன்நாயகியின்) மொய் குழலில் சூட்டுவான் (அவளுக்கு) முன்வந்து (பார்த்து) பாவை இடைக்கு ஆதாரம் இன்மை அறிந்து,தையலாள் பாதாரவிந்தத்தே (அம்மலரை) சூட்டினான்.

பதவுரை

கொய்த - பறித்த
மலரை - பூக்களை
கொடுங்கையினால் - உள்ளங்கையினால்
அணைத்து - பற்றிக்கொண்டு (ஒருநாயகன் தன் தலைவியின்)
மொய் -அடர்ந்த
குழலில் - கூந்தலில்
சூட்டுவான் - சூட்டும்பொருட்டு
முன்வந்து - (அவளுக்கு) முன்வந்து (பார்த்த போது)
பாவை - பதுமைபோன்ற அப்பெண்ணின்
இடைக்கு - இடுப்பிற்கு
ஆதாரம் - (மூலைகளைச் சுமப்பதற்கே) ஆதாரவு
இன்மை - இல்லாமையை
அறிந்து - தெரிந்து
தையலாள் - அப்பெண்ணின்
பாதம் - பாதங்களாகிய
அரவிந்தத்தே - தாமரையிலேயே
சூட்டினான் - (அம்மலர்களை) சூட்டினான்.

விரிவுரை:—நாயகனும் நாயகியுமாகக் கூடிப் பொழிலிடத்தே பூப்பறித்து மகிழ்கின்ற நிகழ்ச்சிகளில் ஒன்று இது. பொழில்விளையாட்டு என்னும் பகுதியில் இதற்கு முன் சென்ற நான்கு செய்யுள்களும் மாதர்கள் தனியே மலர்கொய்வதைக் கூறின. இது காதலரிருவருங் கூடிக் கொய்வதைக் கூறுகின்றது. இனிவரும் இரண்டு செய்யுள்களும் அச்சோலையின் தோற்றம் இன்னவாறு இருந்ததென்பதை வருணிப்பன.

முன்னரே மூலையின் பாரதைத் தாங்கும்வகை யில்லாது துவள்கின்றது இடையென்னும் நினைவு இந்நாயகனுக்கு அவளெதிர் வந்ததும் வரவே, இப்பூவின் சுமையையும் தலையில் சுமத்தினால் இடுப்பொடிந்துபோம் என்பதுணர்ந்து,அதற்குப்பதிலாக மலர்களை அவள் பாதத்திற் கணிந்துவிட்டான். கடவுளைப் பூக்கொண்டு அருச்சனை புரிவோர் அவர் சிரத்திலும் தாளிலும் மலர்தூவுவது வழக்கம். தனக்கொரு தெய்வமாகிய நாயகிக்கும் இவன் தலையில் சூட்ட இயலவில்லையே என்று அயர்ந்து போகாது மலரை அவள் பாத பூசைக்கு உபயோகப் படுத்தினான் என்பது நகைச்சுவை.

குறிப்பு :—சூட்டுவான், வான் ஈற்று வினையெச்சம்.

எற்ற மூலையார்க் கிளைஞ ரிடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமாற்—காற்றசைப்ப
வுக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
யெக்கர் மணன்மே லிசைந்து. 7.

கருத்து :—மணல் குன்றுகளின்மேல் அங்கு மலரும் முத்தும் உதிர்ந்து கிடந்ததால் அவை காதலர் ஊடிய படுக்கையைப்போல் தோன்றின.

அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக்-கலந்தொசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றது
யல்லென்ற சோலை யழகு. 8.

கருத்து :—கலவியாற் களைத்துச் சோர்ந்த மாதர் மலர்ப்பள்ளியில் படுத்திருக்கின்ற அழகையும் போன்றது அச்சோலையி னழகு.

# கம்ப ராமாயணம்

## பால காண்டம்

## 6 கையடைப் படலம்

[536-ம் பக்கத் தொடர்ச்சி]

### நாடகச் சிறப்பும் கதையின் போதுமையும்.

"எமது தொல்குலம் செய்த தவத்தால் முனிவா நீ இங்கு வருவது மாயினாய்," என்று தயரதன் கூறிய முகமனில் உள்ளுறை பொருளாய், 'இராமன் இருப்பதால் நின்னனையர் வா நேர்ந்ததேயன்றி வேறில்லை' என்னுங் கருத்து அமைந்து நிகழ்வதற்கே கம்பர் தன் தயரதனை,

"என் நலம் செய்வினை உண்டு எனினும் அன்று"

எனக்கூற வைக்கின்றார். இவ்விதம் இங்கு எடுத்துக் காட்டி மறுப்பது, வான்மீகி தயரதன் "எனது பாக்கிய விசேஷத்தாலேயே நீர் இங்கு வந்தீர்" என இயம்பியதால் நேர்ந்திருக்கலாம். Dramatic Irony என்ற ஆங்கில அணியைக் குறிக்கும் தமிழ்த்தொடர் ஒன்றில்லையாதலால் ஓராதுரைக்குமணி எனப் புதியதாயாக்கி நாம் அமைத்துக் கொள்ளலாம். தயரதன் ஓராது உரைத்தானேனும், விச்வாமித்திரன் தன்வரையில் 'குலஞ்செய் தவம்' என்றதினுள் மறைந் தடங்கிய கருத்தை ஏற்று எதிர்முகமன் கூறும் வாயிலாக "ஆம் அவ்வாறே, இராமனின் பொருட்டே வந்துளேன்" என்று பொருள்படும் படி :—

என்னனைய முனிவருரு மிமையவரும்
இடையூறொன் றுடைய ரானால்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிநகரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
இகல்கடந்த புலவு வேலோய்

என்று சாற்றிவைத்தனர். "மூவர்க்கும் முதல்வராய ஆதிமூர்த்தி, சிவனாகக் கையிலையிலும் மாலாகப் பாற்கடலிலும் நான்முகனாகப் பிரம்மலோகத்திலும் உபேந்திரனாக இந்திரலோகத்திலும், அங்கங்குத் தன் அம்சத்தில் ஒவ்வொன்றே கொண்டு விளங்க, இங்கு இவ்வயோத்தியில் அப்பரம் பொருளே இராமனென வந்திருப்பதால் யானும் ஈண்டு வரலாயினேன்," என்னும் சங்கேதம் கோசிகனுக்கும் வசிட்டனுக்கு மிடையே நிகழ்வது போல் இவ்வாசகத்தில் தோன்றுகின்றது. அயோத்தியைப் புகழ்வதுபோலும் அதனரசனைப் புகழ்வதுபோலும் தயரதன் ஓராதுரைத்த வாய்மையைத் தழுவி விச்வாமித்திரன் அவன் உணராதபடி தன் உடன்பாட்டை இவ்வாறு தெரிவித்தபின் வேந்தனையே வாயாரப் புகழ்கின்றான்:—

இன்றளிர்கற் பகநறுந்தே னிடைதுளிக்கும்
நிழலிருக்கை யிழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடைக்கீ ழிநினொதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்
டன்றளித்த வரசன்றோ புரந்தரனின்
றான்கின்ற தரச வென்றான்.

இப்புகழ்ச்சியில் தயரதனது வீரம் ஈகை எனும் இரண்டும் அடங்கியுளவேனும் விச்வாமித்திரன் இக்காலம் அம்மன்னனில் வீரத்தையல்லாது வண்மையையே நோக்கி வந்திருப்பதால் ஈகையே தலைசிறக்க உரைமுடிவதாயிற்று. யாசகம் செய்ய வந்துள வொருவன் இச்சகம் பாடுகின்ற இலக்கணப்படி கோசிகனது உரையை இங்கு மதிக்க வேண்டா. பாத்திரங்கள் கதைக்கேற்க ஆடுகின்ற சூத்திரப்பாவைகளா யில்லாது, உயிரோடு உலவி நடிக்கின்ற காலத்தில் அப்பாத்திரங்களின் உள்ளக்கிடைக்கைக்கு ஒப்ப உரைநிகழும். கதைக்கிது சொன்னாற்போதுமென அவை சும்மா விரா. ஒவ்வோர்வேளை சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாமலும் கதைமுறைப் பாத்திரங்கள் பேசிவிடும். உதாரணமாக, விச்வாமித்திரனை வரவேற்ற தயரதன் வான்மீகத்தில் கூறுவதைக் காணலாம். முனிவரர் வருகையால் தயரதனுவகை பெருகவது இயல்பாவது போக அங்கு அவன் இடுக்கண் தீர்ந்தநிலையில் தன்னை வைத்துப் பேசுவது செவ்விதன்று. "மழையில்லாமல் தவிக்கும் தேசத்தில் மிகுதியாக மழை பெய்தால் எவ்விதச் சந்தோஷ முண்டாகுமோ அவ்விதச் சந்தோஷம் எனக்கு உண்டாயிருக்கின்றது. புத்திர பாக்கியமில்லாதவனுக்குத் தனக்குச் சரியான மனைவியிடம் புத்திரோற்பத்தியானால் அவனுள்ளம் எப்படிக் களிக்குமோ அப்படி என் மனம் ஆனந்தமடைகின்றது; பெருநஷ்ட மடைந்தவனுக்கு இலாபங்கிடைத்தால் எவ்விதமான திருப்தியுண்டாகுமோ அவ்விதமான சந்தோஷம் நான் அடைகிறேன்." என வுரைப்பதற்கு ஈண்டு நிபம் என்னை ? இது மனத்தினின்று பிறவாமல் தயாதினின் வாயில் இட்டுவைத்த சொற்கள். வேண்டவும் வேண்டா. ஆனால், கதைக்குவேண்டிய வார்த்தைகள் அதன்பின் வருகின்றன. "உமக்கு எந்தக்காரியம் எந்தவிதமாய் முடியவேண்டுமோ, அந்தக் காரியத்தை அந்தவிதமாகவே நான் மகிழ்ச்சியோடு முடிக்கக் காத்திருக்கின்றேன்.......... நீர் காரியம் எதையாவது உத்தேசித்து வந்திருந்தால் அதைச்சொல்லி யருள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.......... நீர் சொன்ன காரியத்தை நான் செய்கிற விஷயத்தில் நீர் சிறிதும் சங்கிக்க வேண்டியதில்லை. நீரே எனக்குக் கடவுளாதலால் நீர் சொல்லும் வேலையையெல்லாம் செய்யச் சித்தனாய்க் காத்துக்கொண் டிருக்கின்றேன்," எனத் தயரதன் வகுப்பதும், உடனே விச்வாமித்திரன், "நான் எதை உத்தேசித்து வந்திருக்கின்றேனோ அதை இப்பொழுதே தெரிவிக்கின்றேன். அதைச் சத்தியசந்தரான நீர் நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்ற பீடிகையோடு இராமனைக் கேட்பதும் கதையளவு போதியதும் பொருத்தமும் ஆன சொற்கள். நாடகமுறையில், ஒருவருரையை ஒருவர் தொடர்ந்து அவரவர் இயற்கைக்கு இணங்கிச் சம்பாஷணை வளர்ந்து முதிர்வதற்கு இவ்வழி ஏற்றதாகாது. ஆதலால் கம்பர் இச்செய்தியைத் தன் முறைக் கேற்றபடி மாற்றியமைத்துக் கொண்டனர். விச்வாமித்திரன் வேந்தனின் அவைக்கு வந்தால் அவன்பால் ஒன்று கேட்கவே வந்திருக்கவேண்டும் என்ற நியதியில்லையாகையால் தயரதனே முதலில் தருவதாக வாக்களிக்கப் புகுந்திலன். தயரதனின் இடையூறு தீரக் கோசிகன் வந்தானென்று வான்மீகத்தில் சொல்வதற்கு எதிராக, "என் இடையூறு தீருமாறு யான் நின்னிடம் வந்துளேன்" என்ற குறிப்பில் கோசிகனே முதலில் பேசும்படி கம்பரில் மாறி இருக்கின்றது. "நீ கொண்டு அன்று அளித்த அரசன்றோ புரந்தரன் இன்றாள்வது" என்னும் புகழுரையில் இக்குறிப்புத் தங்கியிருக்கின்ற பெருமை சிறிதன்று. "சம்பரனைக் குலத்தோடும் தொலைத்ததை ஒரு பொருளெனக் கொள்ளேன். அவனை வென்றவுடன் இந்திரன் நேராகத் தன்னரசு சென்றிருப்பினும் உன் வெற்றியை உலகோர் அறிவாரேயன்றி ஈகையின் தன்மையை உணரார். சம்பரனை வென்று தேவலோகத்தை வெற்றியின் உரிமையால் நினதே யாக்கிக்கொண்டு பிறகு இந்திரனுக்கு அளித்தனை என்றால் வெஃகுதலில்லா நின் உள்ளத்தின் வள்ளற்றன்மை உயர்வோ உரைக்குந் தரமன்று. அன்ன நின்பால், என்னனைய முனிவாரும் இமையவரும் இடையூறு ஒன்று உடையரானால் வருதலும் வியப்பாமோ" என்ற குறிப்புக் கோசிகன் மொழிந்த எதிர்வினய மொழிகள் காட்டியதைத் தயரதன் உட்கொள்ளாது அயர்ந்திலன். ஆதலால் கோசிகன் இம்மொழிகளை,

உரைசெய்யு மளவிலவன் முகநோக்கி
யுள்ளத்தி னொருவ ராலும்
கரைசெய்ய வரியதொரு பேருவகைக்
கடல்பெருகக் கரங்கள் கூப்பி
அரைசெய்தி யிருந்தபய னெய்தினன்மற்
றினிச்செய்வ தருளு கென்று
முரைசெய்து கடைத்தலையான் முன்மொழியப்
பின்மொழியு முனிவ னாங்கே.

முனிவன் வந்தபோது தயரதன் உற்றதாக வான்மீகி கூறிய உவகையைக் கம்பர் இப்பொழுது விளம்புகின்

றார். உத்தம வள்ளலார்க்குத் தம்மை ஒருவன் ஒன்று கேட்க வந்திருக்கின்றான் என்பது தெரிய அவன் வந்ததால் உண்டான மகிழ்ச்சி பின்னும் சிறந்து விஞ்சுவதாகும். ஆதலால் "வறண்ட கடல் நீர் பெற்றதுபோல்" என்று உவமையைத் தேடி யமைக்காமல், "பேர் உவகைக் கடல் பெருக" என உருவகம் செய்கின்றார். அதுவன்றி, "இப்பொழுது உமது வரவால் என் ஜன்மம் ஸபலமாயிற்று. என் பிழைப்பும் நற்பிழைப்பாயிற்று" என்று வான்மீகத்தில் முனிவன் வந்தவுடன் தயரதன் கூறுவது போற்கூறாது இங்கு அவனுக்கொன்று தான் கொடுக்கத்தக்க பாக்கியத்தை அடையப்போகின்றான் என்று நிச்சயமான பிறகு, "அரசெய்தி இருந்த பயன் எய்தினன்," என்பான். என்று, முனிவன் தன்பால் வேண்டுவ தொன்றுளது என்னுங் குறிப்பை உணர்ந்தற்கிணங்க, இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈயும் குலமுடையோனாதலால் "மற்று இனிச் செய்வது அருளுக" என்று "வேண்டுவதைக் கேள்" என்னும் குறிப்புரை பகருகின்றான்.

பகரும் இவ்வுரையும் மிக்க நயமாயிற்று. கொடு என்று கேட்பதற்கு நாவானது எத்துணை நாணுமோ அத்துணை நாணும் உத்தமர் நாவும் "நின்குறையாது, என்பால் யாது வேண்டி வந்தனை" என்று வினவுதற்கும். ஈவோரும் ஏற்போரும் பொதுவாக எத்தகையவராயினும் கொடுத்ததைப் பெறுகின்ற அந்தமிடம் ஈவோன் கை நிமிர்ந்தும் ஏற்போன்கை தாழ்ந்துமே இருத்தல்இன்றியமையாதது. பெறுவோனுக்குத் தாழ்மை தோன்றாவண்ணம் கொடுப்பதே நன்கொடை இலக்கணம். "இரத்தலும் ஈதலே போலும் கரத்தல் கனவிலும் தேற்றாதார்மாட்டு" என்றனர் திருவள்ளுவ நாயனார். இதன்படி கொடைமிகு பெருந்தகை, பிறர்க்கு ஈதலைத் தானே அவர் மாட்டு ஒன்று இரப்பதேபோல் தோன்றும்வகை நிகழ்த்துவான். எனவே இங்குத்தயரதன், "நமக்குயாது வேண்டும் நான் தருகின்றேன். சங்கிக்கவேண்டாம் தானங்களைப் பெறுவதற்கு உத்தமமான பாத்திரம் நீர்தான்" எனத் தான் கொடுப்பதையும் அவன் ஏற்பதையும் காட்டுகின்ற சொற்களை வற்புறுத்திச் சொல்லாமல் பொதுவாக "இனியான் செய்வது அருளுக" என இரப்பவன் தானே போல் புகன்றுநின்றான்.

இதன்மேல் கேட்கவந்திருப்பதை விச்வாமித்திரன் கேட்பது இயற்கையே. ஆனால் அங்கு வான்மீகத்தில் அரக்கரையும் தன் தவத்தையும் பற்றிச் சொன்னது போல் இங்கும் சொன்னானேனும், "அதைச் சத்திய சந்தரான நீர் நிறைவேற்றி வைக்கவேண்டும்" என்ற முன் நிபந்தனையும், தானே அரக்கர்களைச் சபித்தழிக்காததற்குக் காரணமும், தான் இராமனுக்கு அளிக்கப்போகின்ற அஸ்திர சஸ்திரங்களும், இராமன் வெல்வன் எனும் உறுதி மொழியும் கம்பரில் விட்டு விட்டான், விச்வமித்திரன் இங்குச் சொன்னவை மட்டுமே நாடகம் நடப்பதற்கு இன்றியமையாதது. மற்ற வெல்லாம் கதையிலே பொருந்துவன. ஆதலால், 'மற்றினிச் செய்வதருளுக' என்ற தயரதனுக்குக் கோசிகமுனி,

> தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
> கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
> வெருவரச்சென் றடைகாம வெகுளியென
> நிருதரிடை விலக்கா வண்ணம்
> செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
> நால்வரினுங் கரிய செம்மல்
> ஒருவனைத்தந் திடுதியென வுயிரிக்குங்
> கொடுங்கூற்றி னுளையச் சொன்னான்.

விச்வாமித்திரனின் வாய்க்கு வந்த உபமானம் மிகவும் அருமையானது. தவசைக் கலைக்கின்ற உட்பகைக்கு உவமையாக வெளிநின்று வருத்துகின்ற அரக்கரைக் கூறுதல் நேரிதாகும். ஆனால் இங்குப் பிரத்யக்ஷமான வெளிப்பகைக்கு உபமானம் அப்ரத்யக்ஷமான உட்பகைகள் ஆகின்றன. எனினும், 'தவம் செய்வோர்கள் வெருவரச் சென்றடையும் காமவெகுளி என நிருதர் இடைவிலக்காவண்ணம்' என்ற விச்வாமித்திரனது இவ்வாசகத்தில் இவ்விபரீத உவமை ஒன்றே அறிவுறுத்தற்கு இருந்ததெனின், 'கம்பருக்கே வாயிலக்கு விபரீத உவமை' என்பதோடு மேற்சென்று விடலாம். ஆனால், விச்வாமித்தரன் சொன்னதைக் கம்பர் கேட்டிருந்து எழுதிவைத்தாரே யன்றித் தனக்கு வேண்டியதை அவன் வாயிலிட்டுச் சொல்ல வைக்கவில்லை என்பதற்குத் தக்க சான்று இதில் அமைந்திருக்கின்றது. இதனைத் தான், பாத்திரங்கள் தம் இயற்கைக்கும் சரித்திரத்திற்கும் பொருந்தும்படி சிறப்பாகப் பேசுவதென்றும் நாடக உண்மையாக முன்னிங்குக் குறித்தது. வேறொரு முனிவன் தயரதனிடம் வந்து தன் வேள்வியைக் காப்பதற்கு இராமனைக் கேட்பதானால் அவன் வாயில் இவ்வுவமை இங்கு வந்தபடி வந்திருக்காதென்பது திண்ணம்.

மனதைக் கலைக்கும் உட்பகை காம வெகுளி மயக்கம் என மூன்றாவது பிரசித்தமாயிருக்க, விச்வாமித்திரன் மயக்கத்தை விட்டுவிட்டு மற்ற இரண்டையுமே தனக்குவமையாக எடுத்தாள்கின்றான். இதற்குக் காரணம் வெகுதூரந் தேடவேண்டியதில்லை. சுவாகு மாரீசன் எனும் அரக்கர் இருவர் புகுந்து இடையூறு செய்வதால் மும்மலத்தில் இரண்டையே எடுத்துக்கொள்வது போதுமென்று கணக்கிலே ஈடுசெய்வதல்ல இவ்வுவமை. ஆயின், தாடகையும் இருக்கின்றாள். மயக்கமென்பது பொய்ப்பொருளை மெய்யென மயங்கும் லோகாயதம். பெரும்பான்மை காமத்திற்கும் வெகுளிக்கும் பிறப்பிடம் இம்மயக்கமே. ஆதலால், தாடகையையும் அவள் புத்திரர்களையும் ஒன்றுகூட்டிக் 'காமவெகுளி மயக்கமென உவமை தேர்ந்திருப்பதே சால ஏற்புடைத்தாகும். இதற்கேற்கப் பின் மயக்கமெனுந் தாடகையையே முதலில் அறுக்கவும் வைக்கின்றானிவன். மற்று எதனால் மயக்கத்தை இங்கு விட்டான் என்பதை, மாறுபடமானத தத்துவத்தையும் விச்வாமித்திர சரித்திரத்தையும் நினைவுபடுத்திக்கொண்டால், எளிதில் உணரலாம். மனிதனது மனதின்போக்கு அவனவன் அநுபவத்தைச் சார்ந்தே இயங்கும். விச்வாமித்திரன் மேனகையின்பொருட்டுக் காமத்தாலும் திரிசங்குவின்பொருட்டுக் கோபத்தாலும் தன் தவத்தைக் கெடுத்துக்கொண் டிருக்கின்றானேயன்றி மயக்கத்தால் அவன் தன்னிலை எந்நாளுந் தடுமாறியதில்லை. வேறு என்! மூன்றினில் இரண்டே அவன் வாயில் வந்தன.

T. N. சேஷாசலம்.



# காந்திமதி என்னும்
# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(525-வது பக்கத் தொடர்ச்சி)

## 25. இசைக்கு வசமானார்.

தன்னைக் கண்டவுடன் ஓடியகலும் சேவகன் யாவனென்று சித்ராங்கனுக்குத் தெரிந்துகொள்ள இயலாதது போன்றே, தன்பால் விரைந்தணுகும் அப்பெண்ணையும் முதலிலவன் அறிந்திலன். இவன் படகு கரை சேர்வதும் அவளங்கு வந்துநிற்பதும் ஒன்றாய் நேர்ந்தன. வந்தவளை அரசிளங்குமரன் கருதிநோக்க அன்னாள் தனது உத்தராசங்கத்தைப் பிரித்துத் தலையும் பாதி முகமும் மறையப் போர்த்திக்கொண்டனள்.

"ஹோ, ஹோ ஹோ! பாண்மகளேயோ! படகினிலேறு. இங்கிப்பொழுது நடந்ததனைத்தும் சொல்லாமலே தெரிந்துகொண்டேன். இரதிபௌர்ணிமியன்று உனக்கு யான் மிக்க பயம் உண்டாக்கினேனன்றோ. நீயுமெனக்கு முந்திரிப்பழம் சில பரிவோடளித்தனை. அதற்கெல்லாம் இன்று யான் ஈடு செய்கின்றேன். உம்...... தோணியுள் தாவிக்கொள். நீ உன்நாய் மூட்டை முடிச்சு அத்தனையும்—உம்—ஏறு" என்றனன் சித்ராங்கன்.

பெண்மையாலவள் பேசாவிடினும் ஒவ்வினானென்பதை அவள்முகம் இனிது காட்டவே, அவ்விளவல், முன்னாள் தன் மாதுலன் முன்னிலையில் பரிமீதுதாவ அவளுக்களித்த கரத்தையே இன்றுபடகேற்றித் தன்பத்தினியிடம் அழைத்தேக நீட்டினான். நீட்டிய கரத்தைப் பற்றிப் பாண்மகள் படகினுள் நண்ணலோடும், நரபாலன் தாமோதரனின் செவியருகு இரகசியமாய், "ஏ ஏ! இதற்கோர் இடையூறு சொல்லி விலக்காயேல் நங்கருமம் நசித்தது கண்டாய். இவர்களெல்லாம் உடன்வரின் நாம் செய்ய நினைப்பது தடையுறும். இவளை விலக்குதற்கு ஓர் உபாயம்சொல். தூண்டு, தூண்டு, நின்புத்தியைத் தூண்டு பார்ப்போம்" எனப்பதறினான்.

தாமோதரனும் அவ்வளவிற் சித்ராங்கனை நோக்கிக் "கோமகற்கு அடியேன் புத்தி புகல்வது தகுதியன்று. எனினும், தலைமகன் வெகுண்டானேனும் தக்கன உரைப்பது எம்மனோர் கடன். இப்பாணத்தி பாரசீகத்திலிருந்து வருமவள் என மதிக்கின்றேன். அந்நாட்டில் வைசூரிநோய் அதிகம். ஆகையால் இக்காலாடியின் காற்றுப் படுவதும் தீது. தேவரீர் இவளை இங்ஙனே போக்கிவிடல் வேண்டும்," என்றனன்.

"ஏனடா, உனக்கென்னடா அதுபற்றி, நான் வியாதியாற் செத்தாலென்ன, வைத்தியனாற் செத்தாலென்ன—எல்லாம் ஒன்றேதான்" என்று சித்ராங்கன் புறக்கணித்துப் பேசினான்.

பாண்மகள் படகேறுவதற்குள் அவளது நாய் தாவிப்பாய்ந்து சித்ராங்கனுக்கருகி லமர்ந்து நன்றிபெருகியோ, பண்டை நினைவினாலோ அவனது கையினை முகர்ந்தும் நக்கியும் குலாவத் தலைப்பட்டது. அந்நாயை விலக்கி இழுக்க எத்தனிக்கையில் பாண்மகளின் முகத்தை மறைத்திருந்த சீலை நழுவச் சித்ராங்கன் அவளை உற்று நோக்கி, "நீயார். உண்மையைச் சொல். அன்று மலர்புனைமங்கையாய் இருந்தவளல்லளென நினைக்கின்றேன். உன் பதியும் பேருமென்ன?" என்று வினவினான்.

"நான் பாரசீகப் பாண்மகளே. ஐய, தும் கைகொண்டு அந்நாள் காத்தன் றுடைத்தவளும் யானே—என்பேர்—மா த வி..." என்றவள் எதிர் விளம்பி வருகையில் சித்ராங்கன் விரைந்து "மா.. என்ன இன்னொரு முறையுரை நின்பெயர்," என்றான்.

"மா தவி" என்றாள்.

"மாதவியோ, நன்று. கம்மியன் கலாநாதனோடு நின்னையான் அன்று கூட்டியனுப்பிய நினைவு வருகின்றது.—ஆம்—அப்புறம்?"

"அவர் மனையகம் புகுந்திருக்கையில் அந்நாள் இரவு யாவரோ வந்து அக்கதவை வன்மையோடிடிக்க, யான் கஜேந்திரஸிம்மனது ஏவலரே என்னைத் தொடர்ந்து வந்திருத்தல் வேண்டுமென வஞ்சிப் புறக்கடை வழியாய் நாயுடன் ஓடிவிட்டேன்."

"பிறகு?"

"பிறகு—அங்கும் மிங்கும் திரியலுற்று..."

"அங்குத் திரிந்திருக்கலாம், இங்குத்தான் எவ்வாறு திரிந்துவர நேர்ந்தனை என்பதுணர அவாவுகின்றேன்."

"அரசே, இதைக் கேட்பதனினும், என்னை எவ்விடம் அழைத்துச் செல்கின்றீர் என்பதைச் சொல்வது உத்தமம்."

"உன்னையா, உன்னையொரு பெருமாட்டிக்குப் பாங்கியாய் அமர்த்தி வைக்கின்றேன், வா" என்று சித்ராங்கன் காந்திமதியைக் கருத்திற்கொண்டு செப்பினான்.

"எவ்விடத்தில்...?"

"சித்ரமோகன மாளிகையில்...'!

"ஓகோ! தேவரீர் பத்தினி மாந்தாகினி அரசியினிடமோ?" வெனத் தன் நெஞ்சம் படபடக்கக் கேட்டாள் பாண்மகள்.

"ஆம்" என்று கூறிய சித்ராங்கன் "அவளை நான் பத்தினியாய்ப் பாராட்டுவேனாயின்" எனத் தொடரும் சமயத்தில், மாதவி "அங்கு, அங்கு நோக்குமின்" என்று சேய்மையில் யாவதோ வொன்றைச் சடுதியில் சுட்டிக் காட்ட, அவன் கைவழி நோக்கினவர் ஒன்றுங்காணாமல் மறுபடி இவன் பக்கம் திரும்புவதற்குள் அவள் கதுமென ஆற்றினுட் குதித்துவிட்டாள். தண்ணீர் தளும்பிய ஒலிகேட்டுத் திரும்பிய சித்ராங்கன் பாண்மகளைக் காணாது திகைக்கையில், நாயோ நீரிற்பாய்ந்து உள்முழுகிச் சிறிதுபோதில் மாதவியை மேலே கொண்டுவந்தது. படகைத் துரிதமாய் அவ்விடத்திற்குச் செலுத்திச் சித்ராங்கன் அப்பெண்ணை வாரி எடுத்துத்தன் ஓடத்துள் சேர்த்துக்கொண்டான். மாதவியின் கண்மலர் குவிந்திருந்தன. நாசிவழி உலவிய சிறு உயிர்ப்பாலல்லாது உயிர்க்குறி அவள்பால் வேறில்லை. தனதங்கியைக் கழற்றி அவள் மீது போர்த்திவிட்டு இளவரசன் குழையுண்ட அவள் முகத்தைத் துடைத்தனனாய்வியாகுலம்புகுந்த சிந்தனையிலாழ்ந்தான். "மாலினியல்லாக்கால் மற்றார்கொல் இவ்வணங்கு; மனதிற்கினியாள் எனதருகே எய்துதற்கே அன்று பூவேடம் பூண்டு வந்தனள். இன்று இங்கிவன் வந்ததுவும் என்னைத் தொடர்ந்தே—ஐயோ தெய்வமே...! அன்றன்று அவளன்று—ஆக்கையே நோக்கினவளல்லள்—அன்று யானே அறியாமற் போயினேனென்றால் அவள் தந்தை மணிவாளருக்குமா தெரிந்திராது அக்கோலம்? இல்லை. நடையுடை பாவனைகளெல்லாம் பாரசீகத்திற்குப் பொருந்தியவைகளே. ஆயின், என்னையேன் பின்பற்றினள்! என்ன சங்கையிது! பரத்தைப் பாண்மக

ளொருத்தி என்னேரொருவனை நண்ணுவதும் வியப்பாமோ! மற்று, மந்தாகினியுடன் இனியான் உறைவேனென்றால் இவளேன் தன்னுயிர் துறக்கின்றாள்......" என்று இன்னபல எண்ணங்கள் சித்ராங்கனின் நினைவினூடுருவி யலையலாயின.

இந்தச் சம்பவத்திலோ சூழ்வினைக் காதகர் இருவர்க்கும் மிக்க மகிழ்ச்சி. தம்மொடு தெய்வமே துணைநின்று இவளைத் தொலைகின்றதென அவர் எண்ணினர். மாதவிக்குத் தன்னுணர்வு இன்னும் மீளாதது கண்ட சித்ராங்கன், "ஏ, வைத்தியா, உம்—உன் கைவண்ணஞ் சிறிது காட்டு" என்றனன். நரபாலன் தமோதரனின் முகத்தை நோக்கினன். அவனும் புன்னகையோடு தன்கை ஔடதப் பெட்டியைத் திறக்கச் சித்ராங்கனுக்குச் சங்கையுண்டாயிற்று.

"ஏ, கிழப்பிண்டமே, இமைக்குமுன் இம்மாது உயிர்த்தெழாவிடின் அவள் விழுந்த இடத்திற்கு உன்னை—ஆம் நரபாலா, உன்னையுங் கூட்டியே—அனுப்பிவிடுவேன். மருந்தை ஓர்ந்து தருவாய். இவள் சாவாளானால் ........படகோட்டிகள் எட்டுப்பேர் எனதாணைக்கு அடங்கினவர். ஆதலால், இவையாவும் நினைவிற்கொண்டு நின்பெட்டியை இப்பொழுது திற," எனச் சித்ராங்கன் கடிந்துபேசினான்.

இதைமறந்தால் அக்கணமே உயிரும் தன்னை மறந்தகன்றுவிடும் என்பது தேர்ந்த வைத்தியன் தக்க மருந்தளித்து மாதவியைக் கால்கணத்தில் மயக்கம் நீக்கினான். கண் அலர்ந்த மாதவி 'சித்ராங்கா' என வாய்மலர்ந்தனளாய் எழுந்துட்கார்ந்தாள். கோமகனை அவள் பேரிட்டு இவ்வாறு கூவக்கேட்டவரனைவரும் வியந்தனர். இக்குரலே இவளுக்கும் தன்னினைவு விளைக்க நாணத்தாலழுங்கினாள். அன்னவள்நிலைகண்ட இளவல், அவளுற்றதியக்கந் தேறுமாறு, "நங்காய், நவையிது நீ செய்ததென்னை! மற்றினி என்மடிமீது கண்வளர்ந் திருப்பாயாயின் களைதீர்ந் தெழுந்திருப்பாய்—உணவும் சில ஈண்டுள"வென்று தன் சிற்றுண்டிப் பேழையைத் திறந்தளிக்க, அமுதிற் சிறிது மாதவி மெல்லமெல்ல வருந்தினாள். மற்றுஞ் சில எடுத்துச் சித்ராங்கன் நாய்க்கிட அது வயிறெக்கிக் கவ்வித்தின்றது. அவரவர் எண்ணத்தில் ஆழ்ந்தனராய் யாவரும் வாளா இருந்தனர். விண்ணிற் றவழும் மதியெனப் படகும் மழமழ நீந்தி நீரிற் படர்ந்தது. துடுப்பு துழாவிய நீரின் துழனியும், கரையில் நரிசில சருகிலை கலைதர அகலுமொலியும், மீன்குத்தி விரைகின்ற புட்குலத்தின் சிறை அறைந்த ஓதையும், இது கண்டு குரைக்கின்றவச் சுணங்கனின் குரலுமல்லாது ஒலியில்லை.

இதற்கிடையே நீடுநினைந்தோர் நெட்டுயிர்ப்பு வீங்கினான் சித்ராங்கன். வீங்கி நரபாலனைப் பார்த்து, "நாம் போகுங் காரியத்தில் எனக்குக் கருத்தில்லை, நரபாலா, இனி வந்தவழி மீள்வோம், படகைத் திருப்பச்சொல்" என விதித்தான்.

"அரசே, நின்மனம் மாறியதேன்?" என்றனன் நரபாலன்.

"காந்திமதியை வஞ்சிக்க யான் இணங்கேன்—அவ்வளவே. காரணமும் சொல்வேனானால் நீவிர் தர்க்கத்தால் என்னை வென்று கொல்வீர். கரியதைக் கரியதென்று நான் உள்ளுற உணர்ந்தபோதிலும், நீங்கள் காட்டும் வெண்மையை மறுப்பதற்கொத்த சொல்லாற்றலிலனாய் என்மனமும் மழுங்கும்"

"அற்றன்று அரசே! காந்தியைக் கைகடக்க விட்டுவிட்டு மீள்வாயாயின் அப்பேதமையை நினைக்குந்தோறும் நெடுநாள் மனமழுங்குவாய். வஞ்சனைதான் எங்குளது இக்கருமத்தில்? நெஞ்சினாலவளுனை விழைவதற் கையமுளதோ!"

"கற்பிற் கிருப்பிடம் காந்தி. உத்தமவீரன் கலாநாதனை மணக்க விருக்கின்றாள். இக்களவு அவனைப் பெரிதும் பிழைத்ததாகும். இது ஒவ்வேன் யான்."

கரவுறை நெஞ்சக் கள்வரிருவர்க்கும் கலக்கமுண்டாயது. இனி இதற்கென் செய்வதென நினைத்தனர். "சித்ராங்கா, கம்பியனின் கைவன்மை முற்றிலும் நீ கண்டுளாயாதலால்—அவ்வச்சமே காந்தியை இந்நாள் நின்நினைவினின் றகற்றுகின்றது. தருமமுமன்று, தயையுமன்று" என்றான் நரபாலன்.

"காந்தார நாட்டுக் கோமகனோ நரபாலா, கம்பியனொருவனுக்கு அஞ்சினனென்று செப்புகின்றனை" எனச் சித்ராங்கன் வெகுண்டனன்.

வெள்ளை உள்ளமும் விளங்கிய முகமும் பொருந்திய இப்பிள்ளையின்பால் அவனது ஏவலர் பேரபிமானமுடையாயிருந்த வியல்பே. படகோட்டிகள் எண்மரும் நரபாலனது தோற்றத்தையேனும் தாமோதரனது தோற்றத்தையேனும் நயந்திலர். இப்பொழுது தந்தலைவனைத் தீநெறி புகுத்தவோ அல்லது அவனுக்கே யோர் தீங்கிழைக்கவேதானோ இருவரும் கொண்டேகுகின்றனரென்னும் சங்கை, குகன்வழி வந்தவிவ் வாட்களுக்குப் பிறக்கலாயிற்று. நிபம் ஒன்று நேர்ந்தால் இவ்விருவரையும் நமன் வாயில் நல்கிக் களிப்பார். எனவே, சித்ராங்கன் நரபாலனைச் சினந்தது கண்டு இப்பூசல் பெருகி இங்ஙனே பகையாய் முதிராதோவென்று செவ்விநோக்கிக் கொண்டிருந்தனர்.

ஊகம் நிறைந்த வைத்தியன் இந்நிலையை உணர்ந்து சித்ராங்கனின் சீற்றத்தை அத்தருணம் தணிக்க வெண்ணி, "ஹி! ஹி! ஹி! இளவரசர் பெருமானுக்கு மாறுபட மானதத்துவசாத்திர அறிவு வேண்டும். எவனெவன் எண்ணமும் பேச்சும், அவனறியாமலே, அவனவன் சுய அநுபவத்தைத் தழுவியே நிகழும். கலாநாதனின் கைச்சூடுபட்டிருப்பது நமது நரபாலப்பிரபுதாமே—ஹி! ஹி! கம்பியனைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் இவர் நினைவில் பயமே முடுகிவந்து முன்னிற்குமன்றோ!" என்றான்.

சித்ராங்கன், "உண்மையே இது" எனச் சிரிக்கத் தொடங்கினான். தன்னை நிந்தித்த வைத்தியனின்மீதும், தனதவமானத்தைப் பரிகசிக்கும் இளவரசன் மீதும் அடங்காக் கோபம் நரபலனுக்கு வந்தது. இதைக்கருதப் படகுக் காரர்களுக்குப் பின்னும் மகிழ்வு. முதல்தெரியாததால் மாதவி இதற்கு முடிவுகாண ஆவல்கொண் டிருந்தாள். "சித்ராங்கா, நினக்கிது அழகேயோ! நின் பொருட்டே நானிக்கையிழக்க நேர்ந்தது. பின் நீயே இடித்துக்காட்டி இடியிடியெனச் சிரிக்கின்றாயே," என நரபாலன் முறையிட்டான்.

"பிறரதுகருமத்தில் விரலையும் வைக்கப்படாதென்பர். நீகையையே நுழைத்தனை. அதன்பயனை நீதானேஏற்றுக் கொள்ளவேண்டும். உன் முண்டக் கையை என்முகத்திற்குமுன் நீட்டிநீட்டிக் காட்டுவதால் யாதுநலம்?" என்று சித்ராங்கன் இளிவரப் பேசினான்.

நரபாலன் இதற்கெதிருரைக்குமுன் தாமோதரன், "இறைவா, எளியனேன் இடையிடை புகுவது தகாது. எனினும் ஒன்றுநான் உணர்த்துவேன். கருணாகரர் புதல்விக்குக் கம்பியன்பால் காதலில்லை. தந்தைமிக வற்புறுத்தியுங்கூட இம்மணத்திற்கவள் இன்னும் இணங்கிலள்—



சிசுபாலனைக் கண்ணன் சிந்தித்தானோ!" என்றெடுத்துக்காட்டினான்.

தையலார் திறத்திலே நேயம் காட்டப் பெரியதோர் தூண்டுதல் வேண்டா அவ்விளவல் தான் கைக்கொண்ட கருமம் புராணசம்மதமாயிற்றென எளிதில் தேர்ந்ததால் அந்த நியாயத்திற்கு வயமாயினான். "எனின் நன்று. கண்ணன் செய்ததை நானுஞ் செய்வேன். ஆயினும், இதுவே எனது லீலைகளில் கடையாயது" என்றான்.

"அவ்வாறே ஆகுக" என்று வைத்தியனும் தாமோதரனும் அவர்கொண்ட கொடிய எண்ணத்திற்கிணங்கிக் கூறினர். "இதனினும் கடையாய இழிவுடைச் செயல் வேறிலையாயின், எனிவன் புரிதல் வேண்டும்" என மாதவியின் கண்கள் வினவின.

போகுமுகமே படகு சென்றது. சித்ராங்கன் மாதவியைத் தனதருகழைத்துக், "குழந்தாய், கதுமென நீ நீருள் விழுந்த காரணம் யாது?" என்று கேட்க அவள், "வாழ்க்கை வெறுப்பு" எனக்கூறி மௌனமாயிருந்தாள். "உருக்குமணியை நாடி நீ சென்றக்கால் பாமை பெறும் விஜயம் இதுவே" என்று நரபாலன் நக்கனன்.

"ஆசியச் சொல்லெல்லாம் என்செவி இன்று உறுத்துகின்றன. நும் வாயிற்குத் தாளிட்டுத் தனியேகிடமின்" எனச் சித்ராங்கன் அவர்களைச் சினந்து, மாதவியை நோக்கி, "மாதவி, இசையொன்று பாடு, கேட்போம். பக்திச்சுவையாய் இருப்பின் நலம். என்மனம் இப்பொழுது எனதுள்ளே அகன்று அகன்று உடல்முழுவதும் ஓடிப் பரவுகின்றதுபோன்று ஏதோவோர் உணர்ச்சி என்பால் தோன்றுகின்றது. உலகெலாம் புகுந்திப்போதெனதுள்ளத்துறைந்தாலும் அத்தனையும் உண்டு பின்னும் நிறைதற் கவாவும் என்மனம். இப்பசிதீர்க்க இசை ஒன்றிற்கே இயலும்," என்றனன்.

மாதவி, "யாழ்கொண்டா, குழலோ?" என வினவினள்.

"நின்குரல் கேளாதார் யாழுங் குழலும் வேண்டட்டும். அதுவின்றி, அர்த்தத்தையும் சேர்ந்து அநுபவித்தற்கில்லாமல் இசைக்கருவி வருடல் அரைகுறைக் கீதமென்றே நினைக்கின்றேன்."

மாதவி தன் மனமே உருகிப் பண்ணுருப்பெற்று வார்ந்ததெனப் பாடினாள். படகும் மரமும் நிழலும் நீரும் யாவையும் கரைந்து அவ்வின்னிசை வெள்ளத்தோடு கலந்து போயின. சித்ராங்கன் இவ்விசையின் தேறலை இருசெவியால் மாந்தியே அரைக்கண்மூடி அநுபவித்தான். ஓடமூர்ந்து மாட்கள்கூடத் தாளந்தவறாமல் துடுப்பினை நீரில் அடிப்பாராயினர். அங்கிருந்த நாயுந் தன் காதுகளை நெறித்து மூக்கின் முழையை விரித்தும் சுருக்கியும் தலையைச் சிறிது அசைத்துத் தன்மேற்கதுவும் ஈயை ஓட்டவும் மறந்ததாய் அவள் முகத்தையே உற்று நோக்கி யிருந்தது.

மாதவியை பாடும்படி சித்ராங்கன் சொல்ல ஆரம்பித்தபோது தன்னையவன் கடிந்துரைத்ததற்கு ஆற்றாமை தோற்று முகமோடு நரபாலகன் அவ்விடம்விட்டு விலகிப் படகின் மறுபுறம்போய் உட்காரத் தாமோதரனும் அவனருகு சேர்ந்தான். சேர்ந்தவன் காதுபட நரபாலன், "பாவி இவன் என்னை வைத வசையினைப் பார்த்தாயா! அவனுக்காக நான் பட்டபாடெல்லாம் எண்ணாது என்னை இவ்வாறு அவமதிக்க எத்தனைநாள் பொறுத்திருப்பேன்," என மெல்ல ஓதினன்.

"ஆம், அவன் வசையும், விராடபத்ரன் வாக்களித்த கூலியும் யாருடைய பொறுமையைத்தான் போக்காமலிருக்கமுடியும். நரபாலரே, நம் வேலையை இப்பொழுதே நடத்தி விட்டாலோ" என்றனன் தாமோதரன்.

"எவ்வாறு முடியும்?"

இதற்கு விடை தாமோதரன் கூறுமுன் மாதவி, பாடலும் பண்ணுந்தேர்ந்து இசையை ஆரம்பித்து விட்டாள்.

"இந்தப் பெட்டிக்குள் ஓர் மருந்திருக்கின்றது. அதன் காற்றுப்பட்டால் போதும்," என்று சொல்லிய வைத்தியன் ஒருசிறு பெட்டியை எடுத்துக்காட்ட, அச்சமயத்தில் மாதவி தனதுருவையே ஒலியாக மாற்றி உலகத்துள் பரவுவாள் போல் பாடிக் கொண்டிருந்தனள்.

"ஆயினும் வைத்திய, இச்சிறுவன் சித்ராங்கனைக் கொல்வானேன்? விராடபத்ரன் கொடியன். நம்மனப்படி இவன் நடக்கும் வண்ணம் செய்யவல்லவோர் மருந்திட்டால் போதாதா? பின் அவ்விராடன் தருவேனென்ற பொருளிற்குமேல் பதின்மடங்கு இவனிடம் பறித்துக் கொள்ளலாமே. கொலைப்பாதகம் வீணிலே தேடிக்கொள்ள யான் கூசுகின்றேன்." என நரபாலன் சாற்றினான். தாமோதரனும், "ஆம், அதுவும் ஒருவாறு உண்மையே. அப்படிச் செய்யவும் என்பால் ஓர் மருந்துளது, காட்டவோ" எனத் தன் பெட்டியை நோக்கினான். "எனின், என் மனத்தெழுந்த பாரமொன்று நீங்கிய உணர்ச்சி எனக்குண்டாகின்றது" என நரபாலன் சொல்லுமளவில், பாண்மகள்,

> தித்திக்குந் தேனே போற்றி தெருளாத வினைய கற்றி
> முத்திக்கு மருந்தே போற்றி போற்றி,

என்று பாட்டைமுடிப்பாளாயினாள். வைத்தியனும் நரபாலனும் இருந்த பக்கத்திலிருந்த படகுக்காரர்கள், சம்பாஷணை காதுகேட்காவிட்டாலும், அவர்களையே கவனித்துக்கொண்டிருந்தனர். ஆகையால் பாட்டுமுடிவிற்கு வந்தது இவர்களுக்குத் தெரியவில்லை. மறுசாரிருந்த படகோட்டிகளோ, பாட்டு முடிவதுடன் தங்களையறியாமலே துடுப்பைப் போடுவதும் நிறுத்தினர். வைத்தியனின் பக்கம் இருந்தவர்கள் மாத்திரம் துடுப்புப் போடநேர்ந்தது. எனவே படகு கதுமென ஒருபக்கம் சிறிது சாய்ந்து குலுங்க வைத்தியனின் கையிருந்த மருந்துப் பெட்டி நழுவி ஆற்றில் விழுந்து விட்டது. நரபாலனும் தாமோதரனும் கலக்க மெய்தி ஒருவரை யொருவர் நொந்து நோக்கினர்.

சித்ராங்கன் நெடிதோருயிர்ப்பு வீங்கித் தன்னினைவுற்றுக் கண்திறந்தான். திறந்து, "பெண்ணே நின்னருளால் தித்திக்குந் தேனெதுவென்று இன்று தெருண்டேன். என்வாழ்வு இனி நிகழ்வதெல்லாம் நின்னாலன்றி வேறில்லை. என்னயல் விட்டினி அகன்றிடாயென உரைத்தருள்" என அவள் கரங்களை அன்போடு அணைத்தெடுக்க, அவளும், "ஐயனே, நின் திருவுளம் அதுவாயின் அளியன்யான் மறுப்பனோ" என இசைத்தனள். படகும் போமாறு போய்க்கொண் டிருந்தது.

T. N. சேஷாசலம்.

# வானசாஸ்திரம்.

(532-ம் பக்கத் தொடர்ச்சி.)

## கிரகணங்கள்.

வானத்தில் தோன்றும் சூரியன் சந்திரன் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் யாவும் உருண்டை வடிவமானவை யென்றும் இவைகள் எல்லாவற்றிற்கும் சலனம் உண்டென்றும் கிரகங்கள் ஆகாயவெளியில் அவையவைகளுக்கு ஏற்பட்ட பாதைகளில் என்றும் தவறாது சென்றுகொண்டிருக்கின்றன வென்பதையும் கண்டோம். நக்ஷத்திரங்களின் அசைவுகளைப்பற்றிக் கிடைத்திருக்கும் அறிவு மிக்க அற்பமே. இதற்குக் காரணம் அவைகள் கணக்கிட முடியாத தூரத்தில் இருப்பதே. ஆகாயவெளியில் இந்த அண்டங்கள் எல்லாம் நிலைபெயர்வதால் சில சமயங்களில் ஒரு அண்டம் இன்னொரு அண்டத்திற்கு நேராகவந்து ஒன்றை ஒன்று மறைக்கிறது. நக்ஷத்திரங்கள் ஒன்றை ஒன்று மறைப்பதை நாம் காணுவதில்லை. ஆனால் இவைகளுள் சூரியனும் கிரகங்களும்சந்திரனும் சில சமயங்களில் நமது பார்வையிலிருந்துமறைகின்றன. சூரிய கிரகக்கூட்டத்தில் சில பூமிக்கு மிகவும் சமீபத்தில் இருக்கின்றன. இவைகளுள் சந்திரன்தான் மற்றவைகளைப் பார்க்கிலும் பூமிக்குக் கிட்டவிருக்கும் அண்டம். ஆகவே சந்திரன் நமது பார்வையிலிருந்து கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் மாத்திரமன்று சூரியனையும் மறைக்கின்றது. சூரியனை மறைப்பதற்குக் கிரகணம் என்றும், மற்ற அண்டங்களை மறைப்பதற்குச் சங்கிரமம் என்றும் சொல்வர். இதே விதம் சூரியனும் கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் மறைக்கிறது. ஆனால் இது நமது சூரிய வெளிச்சத்தில் நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை.

கிரகங்கள் மிகச் சிறியவைகளாகத் தோன்றுகிறபடியால் அவைகள் நக்ஷத்திரங்களை மறைப்பதை நாம் வெறுங் கண்களால் காண்பதில்லை. தூரதிருஷ்டியின் உதவியால் இதைக் காணலாம்.

இவ்விதம் ஒரு அண்டம் இன்னொரு அண்டத்தை மறைப்பதனால் அதுசிறிதுகாலம் நமதுபார்வைக்குத்தெரியாமற்போகிறது. மற்றொருவகையிலும் சிலசமயங்களில் வானில் தோன்றும் சோதிகளின் ஒளி நமது பார்வைக்கு வாராதபடி மறைக்கப் படலாம். ஒளி ஊடுருவிச் செல்லாத வஸ்துகளின்மேல் ஒளி வீசினால் அவ்வஸ்துக்களுக்குச் சாயை உண்டாவதை எல்லாருங்கவனித்திருப்பார். அவ்விதமே சூரியவெளிச்சம் பூமியில் வீசும் போதும் பூமிக்குச் சாயை ஏற்படுகிறது. பூமியின் சாயை நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை. இந்தச் சாயைக்குள் சுய ஒளி இல்லாத மற்றொரு அண்டம் பிரவேசிக்குமானால் அது நமது பார்வையிலிருந்து மறைந்து விடுகிறது. இவ்விதம் மறைவது முன் சொன்னதுபோல் ஒரு அண்டம், மற்றொரு அண்டத்துக்கும் நமது பார்வைக்கும் நடுவே வருவதனால் ஏற்படும் மறைவு அல்ல. பூமியின் சாயைக்குள் அகப்பட்டு மறைவதே. சூரியன் மிகவும் பெரிய அண்டமாயும் பூமி சூரியனோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் சிறியதாயு மிருத்தலால் பூமியின்சாயை மிகநீண்ட சாயைஅல்ல. ஆகாய வெளியில் பூமியின் சாயை எட்டும் தூரம் 1000000 மைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த எல்லைக்குள் இந்தச் சாயைக்குள் அகப்படக்கூடியது சந்திரனைத்தவிர வேறு வஸ்து இல்லை. இவ்விதம் சந்திரன் பூமியின் சாயைக்குள் அகப்படுமானால் சிறிது நேரம் சந்திரனுடைய ஒளி மறைந்துபோகிறது. இவ்விதம் சந்திரன் ஒளி மறைவதைத்தான் சந்திர கிரகணம் என்பது. சந்திரன் மாதம் ஒருமுறை பூமியைச் சுற்றிவருகிறதே, ஏன் ஒவ்வொரு மாதமும் பூமியின்சாயை சந்திரனை மறைப்பதில்லை எனக் கேள்வி தோன்றலாம். இதற்குக் காரணம் சந்திரனுடைய சுற்றுப் பாதையும் பூமியின் சுற்றுப் பாதையும் ஒரே மட்டத்திலில்லாமல் சற்று விலகி யிருத்தலால் இச்சம்பவம் ஒவ்வொரு மாதமும் நிகழ்வதில்லை. ஆனால் ஆறுமாத காலத்தில் ஒருமுறையாவது சந்திரன் பூமியின் சாயைக்குள் செல்கின்றது. ஆகவே சந்திரகிரகணத்திற்கும் சூரிய கிரகணத்திற்கும் காரணம் ஒரேதன்மையானதன்று. இரண்டையும் கிரகணம் என்ற ஒரே வார்த்தையால் குறிப்பது தகுதியில்லாததாயினும், வழக்கிலே வந்ததை மாற்றமுடியாது எனினும் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் கவனிக்கத்தக்கது. சந்திரகிரகணம் பூரண கிரகணமாய் இருக்கலாம்; அல்லது பாக கிரகணமாய் இருக்கலாம். பூரண கிரகணத்தில் சந்திரன் முற்றாய்ப் பூமியின்சாயைக்குள் செல்கின்றது. இவ்விதம் சந்திரன் மறைக்கப்படும் காலம் இரண்டுமணி நேரந்தான். கிரகணம் பாகமாயிருந்தால் மறைக்கப்படுகிற பாகத்தில் மாத்திரம் பூமியின் சாயை படுகிறது. பூரணசந்திர கிரகணத்திலும் சந்திரன் முற்றாய் மறைவது சில சமயங்களிற்றான். சாதாரணமாகச் சந்திரன் ஒளி போவதே தவிர அதன் உருவம் தெரியாது போவது இல்லை. இதற்குக் காரணம் சூரிய வெளிச்சம் பூமியின் வாயுப்படலத்துக் கூடாகச் சென்று சந்திரனில் வீசுகிறது. அவ்விதம் சூரிய வெளிச்சம் செல்லும்போது வாயுப்படலம் எந்த நிலையில் இருக்கிறதோ அதை ஒட்டியது சந்திரன் முற்றாய்த் தெரியாமல் மறைவதும் ஒளிமங்கித் தெரியும்.

சூரியகிரகணம் மூன்று வகைப்படும். சூரியன் முற்றாய் மறைந்துபோவது ஒருவகை. சூரியனின் ஒருபாகம் மாத்திரம் மறைக்கப்படுவது மற்றொருவகை. இவையிரண்டும் தவிர சில சமயங்களில் சந்திரனுடைய மண்டலம் சூரியமண்டலத்துக்குள் முற்றாய் அடங்கி அதனால் மறைக்கப்படாமல் சந்திரனைச் சுற்றி மோதிர வடிவாய்ச் சூரிய வெளிச்சம் தெரிவது மூன்றாம்வகை. பூரண சூரிய கிரகணத்தில் சந்திர மண்டலம் சூரியனை முற்றாய் மறைத்து விடுகிறது. சூரியன் பூமியைப் பார்க்கிலும் எத்தனையோமடங்கு பெரியதாயிருப்பதால் பூரணசூரிய கிரகணகாலத்தில் அது எல்லா விடங்களிலும் பூரண கிரகணமாய்த் தோன்றாது. பூமியின் சிறிது பாகத்திலேயே பூரண கிரகணமாய்த் தோற்றும். மற்ற இடங்களில் ஒரு பாகம் மாத்திரம் மறைந்து தோற்றும், கிழக்கு மேற்காக ஏறக்குறைய 165 மைலுக்குள் இருக்கும் இடங்களில்தான் பூரணகிரகண காலத்தில் சூரியன் முற்றாய் மறைக்கப்படும். இந்த எல்லைக்குமேல் இரண்டாயிரம் மைலுக்கு இருபுறத்திலும் ஒருபாகம் மாத்திரம் மறைந்திருக்கும். சாதாரணமாய்ச் சூரியகிரகணம் உண்டாகும்போது பூமியிற் சில பாகங்களில் அது பூரணகிரகணமாய்த் தோன்ற வேண்டும். சில சமயங்களில் பூமியின் ஒருபாகத்திலும் பூரணகிரகணம் தெரியாம லிருப்பதும்உண்டு. இதன் காரணம் முற்றாய் மறைக்கப்பட்டுத் தோன்றுமிடம் பூமிக்கு வெளியில் இருப்பதே.

மேற்சொன்ன மூன்றும் விதமான கிரகணம், சில வேளைகளில் சந்திரன் முற்றாய்ச் சூரிய மண்டலத்தில் அடங்கியிருப்பினும் சூரிய வெளிச்சம் மோதிரவடிவமாய்ச் சந்திரனைச் சுற்றித் தெரிவது. சூரியனைச்சுற்றியோடும் கிரகங்களாவது அல்லது கிரகங்களைச் சுற்றியோடும் உபக்கிரகங்களாவது சரியான வட்டமிடுகிறதில்லை என்று சொல்லியிருக்கிறோம். கிரகங்களின் பாதைகள் நீண்ட வலயங்கள் என்பதையும் காட்டியிருக்கிறோம். ஆகவே பூமி சூரியனைச் சுற்றி வருகையில் சில காலங்களில் சூரியனுக்குச் சற்று சமீபத்தில் வருகிறது. இதன் காரணமாகச் சூரியன் சில காலங்களிற் சற்றுப் பெரியதாயும் சில காலங்களில் சிறியதாயும் தோற்றுகிறது. இதுபோலவே சந்திர மண்டலத்தின் பரிமாணமும் வேறுபடக் காண்கிறோம். சந்திரனும் சூரியனும் சதாரணமாக ஒரே பரிமாணம் உள்ளவைபோற் றோன்றினும் மேற் சொன்னவிதம் அளவை வேறுபட்டுள்ளன. அவ்விதம் சூரியன் பெரியதாய்த்தோன்றும் காலங்களில் கிரகணம் ஏற்பட்டால் சந்திரன் சூரியனை முற்றாய் மறைப்பதில்லை.

சந்திரகிரகணம் பார்ப்பதற்குமனதைக் கவரும் காட்சி ஒன்றேதவிர அதன்மூலமாய் வானசாஸ்திர வளர்ச்சிக்கு ஏற்பட்ட உதவிஒன்றுமில்லை. சூரிய கிரகணங்களின் மூலமாய்ச் சூரியனைப்பற்றிய விஷயங்கள் எவ்வளவோ நமது அறிவுக்கு எட்டியிருக்கின்றன. இதைப்பற்றி முன் சொல்லி யிருக்கிறோம்.



# அகத்திய முனிவர்.

(534-வது பக்கத் தொடர்ச்சி)

அப்பால் முனிவர் நாகாசல மென்னும் திருவேங்கட மலைக்கு வந்து முருகவேளிடம் செந்தமிழை விரிவாகக் கேட்டனரென்று கூறுவார் பலர். இதற்குச் சான்றாகச் சிவஞான முனிவர் "அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக் கடவுள் வரைப்பென்னு மியல்புபற்றித் தமிழ் நாட்டிற்கு வடக்கட் பிறவெல்லையு முளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினு" ரென்று விருத்தியிற் கூறினர். இதற்கியையப் பிறரும்,

"நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்" என்பதில் நெடியோன் என்பது முருகவேளே யாகுமெனவும், நக்கீரனாரும் பொதுப்படக் கூறிச் சென்றனரெனவும் கூறி, இம்மலை முருக னுறைவிடமே யாகுமென நினைப்பர்.

வேங்கடத்தில் முருகபிரான் எழுந்தருளி யிருப்பாராயின் கடைச்சங்கத்தில் வீற்றிருந்த நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் வேங்கடமலையையும் பிரத்தேகம் விரிவாக யெடுத்துக் கூறியிருப்பர். தவிர, பாட்டாங்கு பட்டபடியே சிறிதும் ஏற்றத்தாழ்வின்றி வழுவாது கூறும் ஆசிரியர் இளங்கோவடிகளும்,

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

எனத் திருமாலையே கூறியிருப்பதாலும் பல புராணங்களும் திருமாலையே அம்மலையிற் குறிப்பிடுவதாலும் அவர் காலத்திற்கு முன்பே அது திருமால் திருப்பதியென்று விளங்குகின்றது. தவிர, பார்வதி கலியாண சமயம் தென் திசை வந்து பூபாரம் சமநிலை செய்யவந்த முனிவர் வரும் வழியில் கலியாணங் கழிந்து பல காலஞ் சென்று பிறந்த முருகவேளிடம் உபதேசம் பெற்றாரென்பது பொருந்தாது. ஆனால் பொதிகை மலைக்கு வந்து சில காலங் கழித்து முருகனிடம் உபதேசம் பெற்றாரெனக் கூறினும் ஒருவாறு சிறிதேற்கு மென்னலாம். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டியவாறு பொருள்கொண்டு அமைத்துக்கூறிப் போந்ததால் ஆராய்ச்சி யாளர்க்கு முன்னுக்குப் பின் முரணேற்பட்டு ஐயமும் தோன்றின. ஒருவேளை, திருவரங்கத்தில் விநாயகக் கடவுளிருப்பதுபோல வேங்கடமலையிலும் முருகவேள் க்ஷேத்திர பாலகனாக வுடையா ராதலாலும் திருமாலின் அம்சமே பெரும்பாலும் செவ்வேளிடத்துப் பொருந்தி யிருத்தலாலும், குறிஞ்சிநிலம் முருகனுக் குரித்தாதலாலும் இயைபுடைமைபற்றி வேங்கட மலையும் திருமாலோடு முருகனுறை விடத்திற்கு மியையுமெனக் கூறினும் பொருந்தும். அவ்வாறுங் குறிப்பிடாமையால் அக்கூற்றுப் பொருந்தாதென்க.

அப்பா லகத்தியமுனிவர் பொதிகைமலைச் சாரலிலிருக்கும் திருக்குற்றாலத்திற்கு வந்தார். அப்பொழுது திருக்குற்றாலத்தில் வைணவருக்குரிய திருமாலின் திருப்பதியிருந்தது. வைணவரு மநேக ரிருந்தனர். அவ்வைணவர் அகத்திய முனிவர் முதலானோரின் சிவ சின்னங்களைக் கண்டு இகழ்ந்து கோயிற்குள் போகக் கூடாதென்று தகைந்தனர். முனிவரும் அவர்க ளகந்தையை ஒழிக்கவெண்ணி அப்பாற் சென்று தன்னவருடன் வைணவ வேடம்பூண்டு மீண்டு வந்தனர். அதுகண்ட வைணவர் அவர்களை உபசரித்துத் திருமாலைப் பூசித்துச் செல்ல வேண்டினர். அகத்திய முனிவரும் அதற்கிணங்கித் தம்மவரோடு சென்று திருமாலைப் பூசனை செய்வாராயினர். எவ்வாறெனின்.

அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம்
  பெருமானை யகத்துட் கொண்டு
சிறுகுமுரு வுடையமுனி நாரணனார்
  திருவடிமேற் செங்கை வைத்தே
குறுகுகுறு கெனவுரைத்தே யொள்ளரக்கிற்
  புனைபாவை கோல்மீது
மறுகுதழ லுற்றென்னக் குழைவித்தோர்
  சிவலிங்க வடிவஞ் செய்தான்."

அதாவது சிவபிரானை மனதில் நினைத்துக்கொண்டு திருமால் தலையிற் கை வைத்துக் குறுகு குறுகென்றுரைத்துச் சிவலிங்க வடிவமாக்கிப் பிறகு மாணாக்கருடன் பொதிகை மலைக்குட் சென்றனர். பூமிபாரமும் ஏற்றந் தாழ்வின்றிச் சமமாயிற்று.

அனைவரும் வடபாற் கூடிய பாரத்தாற் சம நிலையின்றி யிருந்த பூமி அகத்திய முனிவர் ஒருவர் மட்டும் தென் திசையில் வந்து வீற்றிருந்ததால் சமநிலையுற்ற தென்றால் "துண்டமதி வைத்தவனை யொத்தமுனி" என்றும், எல்லாத் தேவர்களும் முனிவர்களும் சேர்ந்த தன்மை எவ்வளவோ அவ்வளவு அகத்திய முனிவர் ஒருவர் என்றும் கூறுவது சிறிதும் மிகைபாடும் மிகு புகழு மன்று. சிவபெருமானே நேரில் "ஓரின் வேறுன்னை யொப்பாருலக மூன்றிடத்து மில்லை" என்று கூறியிருக்கின்றனர்.

அகத்திய முனிவர் உலகிற்குச் செய்த நன்மைகளையும் ஒரு வரிசைப் படுத்திக் கூறினோம். இவர் தமிழ் நாட்டிற்குச் செய்த என்றுமழியா நன்மையும் ஏனைய பிறவற்றையுந் தொகுப்போம். அருந்தவர்க்காகாத தொன்றுண்டோ?

பௌவமுண்ட முனிவர் தம் மாணாக்கர் மனைவி முதலானவரோடு பொதிகையி லிருக்குங் காலம் இராவணன் தன்னூட்டோடிர் நாட்டையும் ஆட்சிமுறை செலுத்துங் காலமாகும். திக்கு விஜயஞ் செய்து கொண்டு வந்த இராவணன் ஒருநாள்பொதிகையில்வந்து ஆங்கு உலவிக்கொண்டிருக்கும் உலோபா முத்திரையாரி னழகு முதலியன கண்டு கவர்ந்து செல்லத் தலைப்படக் கண்ட முனிவர்வெகுண்டு அவனைத் தண்டத்தாற்புடைத்துக் கந்தருவத்தாற் பிணித்து விட்டன ரென்பதோர் வரலாறுண்டு. இதற்குப் போதிய சான்றாக வொன்றுமில்லை யாதலால் அடியில் வருமாறிருத்தலே சாலும்.

இராவணன் தன் குலப்பகையராகிய அரசர் வேளிருடனிருக்கும் அகத்திய முனிவரைக்கண்டு சினந்து போர்தொடுக்க எண்ணினான். பிறகு பல காரணங்களால் அவ்வெண்ணத்தை யொழித்து அகத்திய முனிவரிடம் வந்து "ஐயன்மீர்! நெடுங்காலம் யானாண்டுவரும் என்னுடைய இந்நாட்டிற்குள் என்னனுமதியின்றி வருதல் நியாயமன்று" என்றான். அதற்கு முனிவர் "ஐய! நாடுமுதலியன வன்மை மிக்கவர்க்கே யுரியன; ஆதலாற் குற்றமாகாது" என்றார். கேட்ட இராவணன் முனிவர்க்குத் துணைவலி மிக்கிருத்தலை யெண்ணி "இருவுள மவ்வாறாயின், தேவரீரோ ஆயுதமுதலிய படைக்கருவிகளோடாத தவசி; யானோ அவைகளில் மிக்க சமர்த்துடையேன்: ஆதலால் நம் மிருவரும் அம்முறையில், பொருதல் தக்கதன்று; தேவரீர்க்கு இசையில் மிக்க தேர்ச்சியென யானறிவன்; அதில் எனக்கும் சிறிது அறிவுண்டு. இதில்வென்றார்க்கே நாடுமுதலியன உரிமையாகு"மென்றான்.

இருவரும் யாழோடுபாடித் தத்தம் புலமையைக் காட்டினர். முடிவில் முனிவர் யாழ்கொண்டு கந்தருவம் பாடப் புல், மரம் முதலியன தளிர்த்தன. யாறு தம்பித்தது. பொதிகைமலை உருகியது. இதுகண்டு அச்சங்கொண்ட இராவணன் குறுமுனிவர் வசமாய் 'உமது கட்டளைப் படி யொழுகுவன்' என்றான். பிறகு முனிவர், இராக்கதர் முதலியோர் ஆங்கு வாராதிருக்கப் பணித்து அவனை விடுத்தனர் என்பது,

"தென்னவன் பெயரிய துன்னருந் துப்பின்
  தொன்முது கடவுள்"

என்ற மதுரைக் காஞ்சி யடிகளாலும் பிறவாலும் அறியலாகும். பிறகு அங்கு ஆசிரம முதலிய சௌகரியங்களமைத்துக்கொண்டு தம் மாணாக்கரோடு உறைவாராயினர். பிறகு ஆங்காங்குள்ள காடுகளை வெட்டித் திருத்தி நாடாக்கி அவ்வரசர், வேளிர் முதலாயினோரைக் குடியேற்றித் தான் மலையிலிருந்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளை நாடி வந்தனர்.

பின்னொரு கால் சுந்தனென்பவனைச் சாம்பராகும்படி சபித்தனர். இதையறிந்த அவன் மனைவியான சுகேதுவின் மகள் தன் மக்களான சுபாகு மாரீசருடன்,

"தீதுறு மவுணர்கள் தீமை தீர்தர
மோதுறு கடலெலாம் ஒருகை மொண்டிடு
மாதவ னுறைவிடம் வந்து"

மரங்களைப் பிடுங்கி யெறிந்தாள். அப்பொழுது தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவர் வெகுண்டு அவர்களை அரக்கராகும்படி சபித்தனர்.

இராவணனைத் தமிழ் நாட்டிலியங்காது விலக்கிய முனிவர் பிறகு தாயுரையாற் தந்தை சொற்காக்கத் தம்பியொடுந் தாரத்தொடும் தாங்கருந்தவமேற்கொண்டு வனத்திற்கு வந்த இராமனை யுபசரித்து ஓர் வில்லும் பல அரிய பாணங்களும் ஆயுதங்களும் கொடுத்துதவி தனுர்வேத மந்திர மர்மங்களை யெல்லாம் ஒருங்கே கற்பித்ததுமன்றி, இராவணனதியரைக் கொல்ல உபாயமுங் கூறி, வெற்றிபெற ஆதித்யஹ்ருதய மென்னும் மந்திரத்தையும் உபதேசித்துப் பாசுபத விருதானுஷ்டானபரனுக்கித் தண்டகவனத்தின் வரலாற்றையு முரைத்தனர். அதன்படி பிறகு இராமன் இராவணனைக் கொன்று சீதையை மீட்டுக்கொண்டு அயோத்திக்குத் திரும்பி வரும்போது அகத்திய முனிவரும் அழைத்து வரப்பட்டார்.

"அம்பொனெடு மணிமாட அயோத்தியெய்தி
அரசெய்தி யகத்தியன் வாய்த்தான் முன்கொன்றான்
தன்பெருந் தொல்கதை கேட்டு"

என்றும்;

"தவத்தோனீந்த நிறைமணிப் பூணணியுங் கொண்டு"

என்றும் குலசேகராழ்வா ரருளிச்செய்திருக்கிறபடி அகத்திய முனிவரும் இராமனுக்கு இறந்துபோன இராவணன் சரித்திரங்களை (ராமாயண உத்தரகாண்டத்தை) கூறியருளியது மன்றி விலையளவிடலரிய ஓர் முத்தாரத்தையு மளித்தனர். இராமன் அகத்தியாசிரமத்திற்குட் போகும்போது அவராற் பூசிக்கப்பட்ட பிரமன், விஷ்ணு, அக்கினி, இந்திரன், சூரியன், சந்திரன், பகன், குபேரன், தாதா விதாதா, சேடன், காயத்ரி, வசுக்கள், எமன், வருணன், முருகவேள், அறக்கடவுள் ஆகிய இவர்களுடைய இருப்பிடங்களைப் பார்த்துச் சென்றதாக வான்மீகர் கூறியுள்ளார்.

அகத்தியமுனிவர் பொதிகையிலிருக்குங்கால் தமிழுக்கு எல்லையிலக்கண மியற்றலாயினர். இவர் இலக்கண மியற்றுவதற்குமுன் தமிழுக்கிலக்கண நூலிருந்ததாகத் தெரியவில்லை. அப்பொழுது தமிழ்ப்பாஷையானது இலக்கண வரம்பின்றி இலக்கிய வழக்க மாத்திரையானே பரவியிருந்தது. அவ்விலக்கியங்களையும் பிறவற்றையு மாதாரமாக வைத்துக்கொண்டு முனிவர் இயலிசை நாடகமென்னும் முத்தமிழுக்கும் இலக்கண வரையறை ஏற்படுத்தி விரிவான ஓர் இலக்கணநூல் கற்பித்து அந்நூலுக்குத் தம்பெயரால் "அகத்தியம்" எனப்பெயர் வைத்து அதைத் தம் மாணாக்கர்க்குப் பயிற்றுவித்தனர். அவர் மாணாக்கராவார் தொல்காப்பியர், அதங்கோட்டாசான் (அதங்கோட்டு முனிவர்) துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகனார், பனம்பாரனார், கழாரம்பனார், அவினயனார் காக்கைப்பாடினியார், நற்றத்தனார், வாமனனார், செயிற்றியனார் எனும் பன்னிருவராவர். இம்முறையின்றிச் சிறிது மாறுபடுத்தியுங் கூறுவர். அவர்களும் அகத்திய முனிவருக்கு மாணாக்கரென்பதற்கையமின்று. இப்பன்னிருவரும் இவரிடம் கற்றுப் பன்னிரு படலமென்னும் புறப்பொருள் நூலை முறையே செய்தவராதலால் அம்முறைபற்றிக் கூறப்பட்டவராவர். ஏனையோர் வெவ்வேறு முறையில் மாணாக்கராயிருக்கலாம்.

தற்போதைய நிலையிலிருந்து அநுமானத்தாலன்றி அகத்தியம் ப்ரத்தியக்ஷத்திலறிய முடியாமலிருக்கிறது. உரையாசிரியர் பலர் இதிலுள்ள சிற்சில சூத்திரங்களை யெடுத்துக் கையாண்டிருக்கின்றனரேயன்றி நூல்முழுவதுங் கிடைக்கப்பட்டிலது. அகத்திய நூல் அங்ஙனம் வழக்கத்தினின்று மொழிந்து போனதற்குக் கற்பித்திருக்குங் காரணத்தைப் பிறகு காட்டுவோம். இவ்வகத்தியம் மிகவும் விரிவுடைய பேரகத்திய மாதலால் அதைக் குறுக்கிச் சிற்றகத்திய மென்னும் ஓர் நூலும் செய்தனரெனத் தெரிகின்றது. முத்தமிழுமடங்கிய விரிந்த இலக்கண நூலைத்தவிர பல நீதிகளடங்கிய கடவுள் துதிகளும், தற்கம், சோதிடம், வாகடம், சித்தநூல் முதலிய நூற்களும் இயற்றி யிருக்கின்றனர். அவைகள் இவைதாமென்று தற்பொழுது வழக்கத்தி லிருப்பவைகளை வைத்துக் குறிப்பிடத் தக்கன வல்ல.

பிற்காலத்தார் பலர் இவைகள் சம்பந்தமான பல நூற்களைப் புதிதாக வியற்றி அகத்திய முனிவரின் பெயரை வைத்துவிட்டனர். ஞானவெட்டியைத் திருவள்ளுவர் தாங்குதல் போலவும், பல உடுக்கைதட்டிப் பாடும் பாடல்களை யெல்லாம் ஒருங்கே புகழேந்திப்புலவர் சுமத்தல் போலவும் வைத்தியம் சோதிடம் முதலிய போலி நூற்களை அகத்திய முனிவர் சுமக்கின்றனர் உண்மை அகத்திய முனிவருக்குப் பிறகு எத்தனையோ போலியகத்திய முனிவர் தோன்றி நூல்செய்தனர்—செய்கின்றனர்—செய்யக் காத்திருக்கின்றனர். அவை விரிக்கிற் பெருகுமெனு மச்சமேற்பட்டது. இவ்வாறு உருவத்திற் குறுகிய முனிவர் தலையில் இப்பெரிய பளுவான பாரத்தைச் சுமத்துதல் நன்மையன்று. காலவடைவில் அகத்திய முனிவரே நேரில் வந்து பார்த்தால் நம்மைச் சபியாதிருந்தபோதிலும் வயிறு குலுங்க நகையாடி ஏளனஞ் செய்வதோ டமையாது நியாயமன்றத்தில் வழக்குத் தொடுத்து நஷ்ட வசூலும் மான நஷ்ட வசூலுஞ் செய்வரென்பதற்கு ஐயமுளதோ?

இலக்கண முதலிய பலநூற்க ளியற்றினமையின் அகத்தியமுனிவருக்குத்தொன்னூலறைமுனி, மூதுரைத் தமிழ் முற்றுணர்மாமுனி, வண்டமிழ் முனிவர், சந்தநூற்றமிழ்த் தாபதன், மெய்த்தமிழ்முனிவன், பைந்தமிழ் முனிவன், அரிய தீந்தமிழ் முனிவன், தமிழ்தேர் வள்ளல், முத்தண்டமிழ் தேர்முனி, எனவும்; தமிழ்நர்கோமான், தமிழ் தெரியறவோன், தன்னிகர்த் தமிழ்வாய்மைத் தலைவன் எனவும் பிறவும் பெயர்கள் வழங்கலாயின. இப்பெயர்கள் தமிழுக்கிலக்கண முதலிய நூற்களியற்றிய சிறப்புப்பற்றிப் பிற்காலத்தவர் கூறலாயினர். தற்காலத்தவரும் இவைகளை வைத்துக்கொண்டு வடமொழியகத்திய ரென்றொருவ ருண்டெனக் கொண்டனர். அகத்தியருக்கு இப்பெயர்கள் வருவதற்குமுன் வழங்கிவந்த பெயர்களை ஆராய்ந்தால் 'அகத்தியர் ஒருவரா' என்ற வினாவிற்குத் தக்கவிடை கிடைக்கும்.

பின்னொரு காலம் அன்றுதொட்டு வந்த பாண்டிய வம்சத்தவனும் வைணவனுமான இந்திரத்தயும்நனென்பவன் அகத்தியமுனிவர் வந்தபோது யோக நிஷ்டையி லிருந்ததால், தன்னை மதித்து உபசரிக்கவில்லை யென்று அகத்திய முனிவரெண்ணி அவனை யானையாகுமாறு சபித்தன ரென்றொரு கதை கூறுவர். நிஷ்டையி லிருப்பவனை முக்காலமு முணரும் முனிவரறியா திருக்கமாட்டார். முனிவை யறவே யொழித்த முனிவர் அவ்வாறு சபித்திருக்கவுமாட்டார். தான் வைணவனானதால் சைவராக வரும் அகத்தியமுனிவரை மதிக்காத காரணத்தால் முனிவர் சபித்தனரென்று கூறுவதே பொருத்தமுடைத்து. அகத்தியமுனிவர் தன்னை மதியாதிருந்தவர்களைச் சபித்திருப்பதுமன்றி, தன்னை வந்தடைக்கலம் புகுந்து பூசித்துபசரித்து வேண்டிய சுவேத னென்பவனுக்குப் பிணந்தின்னும் சாபத்தை யொழித்தருளினர். இவ்வரலாறு உத்தர ராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது. இதனால் இவர் தன்னை யண்டினவர்க்கு நன்மையும் மிண்டினவர்க்குத் தீமையுஞ் செய்தருளுந் தன்மையுடையவ ரென்றறியலாகும்.

(தொடரும்)

R. முத்தையர்.



# மலர்வனம்.

## இருவர் தேவியர்.

புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையில் நீருண்ணவுலகாள்வது அரிதெனின், கல்வியும் பொருளும் ஓரிடத்தே இணங்கி வாழ்தல் அதனினும் அரிது. அரிதெனினும் அவை இரண்டையும் சேர்த்துவைத்தல் ஒன்றே மாந்தரை மாண்புடையா ராக்கும். இச்செய்தி யாவரும் அறிந்ததேயாயினும், தோலாமொழித்தேவர் இதனைத் தம்மனத்தேகொண்டு குறிப்பாக வுணர்த்தியவோர் உவமையைச் சூளாமணியுள் கண்டுளிரோ, நண்பர்காள்:—

சுரமைக்கதிபதி பயாபதிவேந்தன், மிகாபதி சசி என்பார் இருவர் மனைவியர் எய்தி வாழ்ந்தனன். சகக்களத்தியர் சேர்ந்துடன் உறைவது எளியதன்று. ஆயினும் அவ்விருவரும் மாறுபட நேர்வதெல்லாம் நாயகனின் மதிக்குறைவாலேயே பெரும்பாலும் விளைகின்றது. இவன் ஒத்த அன்பை அவ்விருவருக்கும் அளித்து அவ்விரவர் அன்பையும் ஒத்தபடி தானும் பெறுவானாயின் பின் எங்கெங்கும் இன்பமொழியத் துன்பமில்லை. ஆதலால்,

பெருமக னுருகும் பெண்மை
மாண்பினும் பேணிசாலும்
மருவினும் புதிய போலு
மழலையங் கிளவி யாலும்
திருமகள் புலமை யாக்குஞ்
செல்வியென் றிவர்கள் போல
இருவரு மிறைவ னுள்ளத்
தொருவரா யினிய ரானார்.

[மிகாபதி என்பாள் அரசனை உருகச்செய்யும் பெண்மையின் பெருமையாலும், (சசி என்பாள்) நாடோறும் பழகினும் பழகப்பழகப் புதியதுபோன்ற மழலைச் சொற்களாலும், திருமகள் கலைமகள் என்ற அவர்களைப்போல் இவ்விருவரும் தம்நாயகனது உள்ளத்தில் ஒருவராகி இனியவராயினர்.]

விக்ர மோர்வசியில் காளிதாச மகாகவி நாரதர் மூலமாய் இந்திரனிடத்தில் புரூருவன் கேட்பதற்கியன்ற வரமும் இதுவே என நாடகத்தை முடிக்கின்ற விதமும் இன்னதே:—

"கல்வியுஞ் செல்வமும் வழக்கப்படி பகையாய் முரணி இகலாமல், இணங்கிய நட்பினின் தொடர்த்துடன் சேர்ந்து மன்பதைத் தொகுதியின் நீங்கா நன்மையை நிலைத்திடச் செய்க."

"மதுகரம்."

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

## கம்பராமாயணம்

## பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

## ஏமாங்கதத்

## திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

# KAMBAN'S KOSALA

or

## A Poet's Plea for Culture

### by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

### With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.



## வர்த்தமானம்.

சென்னை காங்கிரஸ் கமிட்டி பண்டிதர் மோதி லால் நேருவை இந்த வருஷ காங்கிரஸ் தலைவராகத் தெரிந் தெடுத்திருக்கிறது.

***

பம்பாயில் நரிமன் கோலின் காரணமாகப் பம்பாய் அரசாங்கத்தார் சிலரைக் கைக்கூலி வாங்கினதற்காகக் குற்றஞ் சாட்டி வழக்கெடுக்க விருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

***

65-மணிநேரம் ஆகாயத்தில்: —றிஸ்டிகஸ் என்பவ னும் ஜிம்மர்மன் என்பவனும் 65-மணிநேரம் ஒரு ஆகாய விமானத்தில் ஆகாயத்தி லிருந்திருக்கிறார்கள். 5000-மைல் தூரம் சென்றிருக்கிறார்கள். இதுவரையி லும் ஒருவரும் இவ்வளவு நேரம் ஆகாயத்தில் வேறு யாரும் இருந்ததில்லை.

***

கப்பல் சேதம்:—சிசிலியில் கப்பற் படையைச் சேர்ந்த அங்கமஸ் என்னும் கப்பல் ஒன்று 'அறு ஆக்கோ'க் குடாவில் புயலில் அகப்பட்டுப் பாறைகளுக்குள் மோதி ஒடிந்து விட்டது. 29 பேர் இறந்து விட்டார்கள். நாலு பேர் உயிருடன் கரை சேர்ந்தார்கள். அதில் 215 கப்ப லாட்களும் 80 பிரயாணிகளும் இருந்தார்கள். காப்டன் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது.

***

இந்திய புகையிரதப் பாதைத் தொழிலாளர் கூட் டம்:—இந்த மாதம் பதினெட்டாம் தேதி திருச்சினாப் பள்ளியில் எல்லாப் புகையிரதப் பாதைகளில் வேலைசெய் யும் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும்ஒருமித்து எல்லாவிடங்களிலும் தொழிலாளர் வேண்டும் ஒழுங்கு கள் ரயில்வே அதிகாரிகள் செய்யாமல் போனால் வேலை நிறுத்துவதைப் பற்றி யோசிக்க விருக்கிறார்கள்.

***

பம்பாய் நெசவுச் சாலைகள்:—வேலை நிறுத்திய தொழிலாளர்களுக்குப் பம்பாய் முனிசிபாலிட்டியார் முனிசிப்பல் பணத்திலிருந்து உதவி கொடுப்பது அவ சியமா என்பதைப்பற்றி விசாரணை செய்யும்படி நியமிக் கப்பட்ட கமிட்டியார் உதவி கொடுக்கப்படா தென்ற முடிவுக்கு வந்தார்கள். இதைப்பற்றி, முனிசிபல் கவுன் சிலர்கள் யோசித்து முடிவுக்கு வருவார்கள்.

***

தென்னிந்திய ரயில் பாதையில் சார்ஜு குறைத் தல்:—அக்டோபர் முதல் தேதியிலிருந்து மூன்றாம் வகுப்புப் பிராயாணிகளின் சார்ஜுகள் குறைக்கப்படும். முதல் 100-மைலுக்கு 4-பை வீதமும் அதற்கு மேல் 200-மைலுக்கு 3½பை வீதமும் அதற்குமேல் 2½பையும் மேல் வண்டிகளின் சார்ஜு சாதாரண வண்டிகளுக்கு முதல் 50-மைலுக்கு 3½பையும் அதற்குமேல் 300மைல் வரையிலும் 2½பையும் 300 மைலுக்குமேல் 2பையும் ஆகும்.

***

புத்தர் பிறந்த இடம்:—ஒரிசாவில் சிலநாட்களுக்கு முன் அசோகச் சக்கரவர்த்தியினால் நிறுத்தப்பட்ட கல் வெட்டு ஒன்று அகப்பட்டிருக்கிறது. இதில் 'இதுதான் புத்தர் பிறந்த இடம்' என்று வரையப்பட் டிருக்கிறது. இதேமாதிரியான ஒரு கல்வெட்டு நேபாளத்திலும் இருந்தது. இதுவரையிலும் புத்தர் பிறந்தஇடம் நேபா ளம் என்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட் டிருக் கிறது. இப்போது அகப்பட்ட கல்வெட்டு நேபாளத்தி லிருந்தே ஏதோ காரணத்திற்காக ஒரிசாவுக்குக் கொண்டுவரப்பட் டிருக்கவேண்டும்.

***

தென்இந்தியா சங்கீதம்: —சென்றவாரம் இந்த விஷ யத்தைப்பற்றி H. A. பாப்பிளீ என்பவர் ஸிம்லாவில் Y.M.C.A.மண்டபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். புரா தன காலத்திலிருந்து இந்தியாவின் சங்கீதவளர்ச்சியைப் பற்றி எடுத்துக் காட்டி இடையில் வட இந்தியாவில் 14-ம் 15-ம் நூற்றாண்டுகளில் பாரசிக மகதிய சேர்க்கை யால் இந்த நாட்டுச் சங்கீதம் மாறுதல்கள் அடைந்தது என்றும் தென்இந்தியாவில் இவ்விதக் கலப்பு இல்லாமல் பழைய சங்கீதம் வளர்ச்சி பெற்றிருக்கிற தென்றும் சொன்னார்.

***

ஹவுற புகைவண்டி விபத்து:—ஹவுறவிலிருந்து புறப்பட்ட பிரயாணிகள்வண்டி ஒன்று சென்ற மூன்றாந் தேதி இரவு பத்தேமுக்கால் மணியளவில் ஏழாவது மைலில் பாதையைவிட்டு விலகினதினால் பிரயாணிகள் அநேகருக்குக் காயம்பட்டது. அநேகர் இறந்தும் விட் டார்கள். இந்தச்சம்பவத்தின் காரணம் என்னவென்பது இன்னும் தெரியவில்லை. இஞ்சின் ஒரு மதகைக்கிட்ட, முதலில் பாதையைவிட்டு விலக அதற்குப் பின்னிருந்த சாமான்கள் வண்டியும் பிரயாணிகள் வண்டியும் ஒன்றோடொன்று மோதிச் செருகிக்கொண்டன. பின்னே இருந்த இரண்டு ஜன வண்டிகள் பாதையை விட்டு விலகிக் கீழே சாய்ந்துவிட்டன.

18901

***

பர்தோலி வரிகொடா இயக்கம்:—இதைப்பற்றிப் பண்டித மோதிலால் நேரு ஒரு அறிக்கை வெளியிட் டிருக்கிறார். இதுபோலவே சர் டேச் பகதூர் சப்புருவும், சர் அலி இமாம் என்பவரும் தனித்தனியாய்த் தங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். பம் பாய் அரசாங்கத்தார் பின்பற்றியமுறை சுத்த தப்பான முறை என்பதும், கிஸ்தித் தொகையைச் சரியான விசா ரணையின்றி ஏற்றினது சட்டத்துக்கு விரோதமாகையால் திரும்ப ஒரு விசாரணை இதைப்பற்றிக் கூடிய சீக்கிரத்தில் செய்து முடிப்பதே அரசாங்கத்தாரின் கடமைஎன்பதும் குடியானவர்கள் சத்தியாக்கிரகம் செய்வது மிகவும் வியக்கத்தக்கதென்பதும் இவர்களுடைய அபிப்பிராயம்.

***

ஒரு லக்ஷம் ரூபாய் விலையுள்ள வைரம்:—பிஷாவ ரைச்சேர்ந்த ஒருபட்டாண்லாகூரில் ஒருவனுக்கு லக்ஷம் ரூபா விலையுள்ள ஒருவைரத்தை 60000 ரூபாவுக்கு விற் றான். இவனைப் போலிசார் கைதி செய்திக்கிறார்கள். இந்த வைரம் யாருக்குச்சேர்ந்ததென்று இன்னும்தெரிய வில்லை. இது பத்து வருஷத்துக்கு முன் அலபாத்தில் ஒருபெரிய உத்தியோகஸ்தனுடைய வீட்டில் கொள்ளை நடந்தபோது காணமற்போய்விட்டது. இந்த உத்தியோ கஸ்தனுடையசொத்துகள் அந்தச்சமயத்தில்இராசதுரோ கத்துக்காக இராசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டி ருந்தது. இப்போ இந்த வைரத்தை ஆப்கான் அரசாங் காத்தார் தங்களுக்கு உரியதென்று சொல்லுகிறார்கள்.

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

## T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

## Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "***KALANILAYAM***"
**11, Vellala Street, Purasawalkum, Madras.**



# Dr. Orison Swett Marden's
# World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

### GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

### RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where yon are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

### SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

### HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty

### PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

### EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

### THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

### THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

**Special Indian Edition Rupee 1-8-0 each**

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)